REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜனவரி 19 வெள்ளிக்கிழமை


# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 17 | Friday 19, January, 2024 | 16 பக்கங்கள் | 50/-

## கிரிப்டோ நாணய முதலீடு; பாரியளவில் மோசடிகள்

**மக்களுக்கு மத்திய வங்கி எச்சரிக்கை**



இலங்கையில் கிரிப்டோ நாணய முதலீடு தொடர்பான மோசடிகள் பாரியளவில் இடம்பெற்று வருவதாக, இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது. ஆகையால் மோசடிக்காரர்

06

புதிய தேசிய அடையாள அட்டை

## Biometric தரவுகள் சேகரிப்பு ஜூன் மாதம் முதல் ஆரம்பம்



புதிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை தொடர்பான பிரஜைகளின் (Biometric) பயோமெற்றிக் தரவு சேகரிப்பு எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் மேற்கொள்ளப்பட உள்ளதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று (18) காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஆரம்பக்கட்ட பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதாகவும், அதற்கான உட்கட்டமைப்புகள் தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் அனைத்து பிரதேச செயலகங்கள் ஊடாக பிரஜைகளின் பயோமெற்றிக் தரவுகள்,

06

பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்ப

## புதிய முதலீடுகள் குறித்து இலங்கை நம்பிக்கை



**ஜனாதிபதி**

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான குறுகியகால மூலோபாயமாக சுற்றுலா ஊக்குவிப்பு, விவசாய நவீனமயமாக்கல் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், இவற்றுக்காக இலங்கை தற்போது புதிய முதலீடுகளை ஈர்க்கும் நம்பிக்கையில் இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தின் (WEF) பங்குதாரர்கள் உரையாடலின் ஒரு அங்கமான நிபுணர் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

06



சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டுடன் இணைந்ததாக நேற்று (17) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்தினத்துக்கும் (Tharman Shanmugaratnam) இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

வீதிப் போக்குவரத்து சட்டங்களை மீறும் சாரதிகளுக்கு ஆபத்து

# கொழும்பில் சிசிடிவி மூலம் வாகனங்கள் கண்காணிப்பு

**திங்கள் முதல் விசேட வேலைத்திட்டம் ஆரம்பம்**

**பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன்**



**விதிமுறைகளை மீறி தவறிழைப்பது கண்டறியப்படின் வாகன உரிமையாளரின் வீடுகளுக்கே அபராத பற்றுச்சீட்டு கையளிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு நகர்ப்புறங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சிசிடிவி கெமரா கட்டமைப்புகளை பயன்படுத்தி வீதிப் போக்குவரத்து சட்டங்களை மீறும் சாரதிகளை இனங்காணும் விசேட வேலைத்திட்டமொன்றை எதிர்வரும் 22ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் உள்ளிட்ட வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் சமிக்ஞைகளை அலட்சியம் செய்து வாகனம் செலுத்தும் சாரதிகள் தொடர்பில் இந்த கெமரா கட்டமைப்பில் பதிவாகும் தரவுகளைக் கொண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்போது அவ்வாறு விதிமுறைகளை மீறும் சாரதிகளை

06

கடந்த மாதத்தில் முன்னெடுக்கப்பட்ட

## யுக்திய விசேட சுற்றிவளைப்புகளால் குற்றச்செயல்கள் 17 வீதம் குறைவு



பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் பொலிஸ் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட யுக்திய நடவடிக்கையின் காரணமாக கடந்த மாதத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்களின் எண்ணிக்கை 17% குறைந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அனைத்து

06

உள்ளூர் உற்பத்தி அதிகரிப்பு ஊடாக

## சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்

**அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து**



சுயதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதனூடாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து முயற்சியாளர்களின் சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியுமென சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில்

06

## தணிக்கை சபை இரத்து



**புதிய அரங்கக்கலை சட்டவரைவு ஜனாதிபதி செயலரிடம் கையளிப்பு**

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து சுதந்திரம் மற்றும் ஆக்கபூர்வ உரிமைகளை பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டு பொது அரங்கக்கலை வகைப்படுத்தல் சட்டவரைவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் குழுவினால் அண்மையில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த புதிய வரைவை தயாரிப்பதற்காக தணிக்கை சபையின் முன்னாள் தலைவர் சமன் அதாவுதஹெட்டி

06

## சர்வதேச மாநாடுகளில் பங்கேற்க ஜனாதிபதி உகண்டா பயணமானார்

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் (NonAligned Movement) 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு மற்றும் G77 மற்றும் சீனாவின் 03 ஆவது தென் மாநாடு என்பவற்றில் (03rd South Summit of the Group of 77 & China) பங்கேற்பதற்காக உகண்டாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

உகண்டா குடியரசு ஜனாதிபதி யொவேரி முசேவெனியின் (Yoweri Museveni) அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார். சுவிட்சர்லாந்துக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி, அங்கிருந்து

06

## ஒவ்வொரு வர்த்தகரும் நாமும் வற் வரியை செலுத்தினால் வரிச்சுமையை குறைக்கலாம்



ஒவ்வொரு வர்த்தகரும் நாமும் சிறிய அல்லது கூடுதல் வற் வரியை செலுத்தினால் வற் வரியின் சுமையை குறைக்க முடியுமென போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாணந்துறையில் சரசவி புத்தக நிலையத்தின் புதிய கிளையை நேற்று (18) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அனைவரும் வற் வரி செலுத்தினால் வரி செலுத்தும் சதவீதம்

06

## 'யுக்திய' விசேட சுற்றிவளைப்புகள் ஒரு மாதத்துக்குள் 40,590 பேர் கைது

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் யுக்திய சுற்றிவளைப்பு வேலைத்திட்டத்தின் மூலம் கடந்த ஒரு மாத காலத்தில் 40, 590 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு நேற்றுடன் ஒரு மாதம்

06

'அஸ்வெசும' கொடுப்பனவுக்கு

## புதிதாக மூன்று இலட்சம் குடும்பங்கள் உள்ளீர்ப்பு



**நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க**


**லோரன்ஸ் செல்வநாயகம்**

அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு மேலும் மூன்று இலட்சம் குடும்பங்கள் புதிதாக தகைமை பெற்றுள்ளதாக

06

## ஆண்டின் முதல் 15 நாட்களில் 5,892 டெங்கு நோயாளர் பதிவு

**மேல் மாகாணத்தில் மட்டும் 1,956 பேர்**



நாடளாவிய ரீதியில் இந்த வருடத்தின் முதல் 15 நாட்களில் 5,892 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்தது.

டெங்கு நோயாளர்களில் 1,956 பேர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும், இந்த நோயாளர்களில் 1,228 பேர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகவும், அப்பிரிவு தெரிவித்தது.

06

மின்சார கட்டணத்தில் திருத்தம்

## பொதுமக்களின் கருத்துகளை பெறுவதற்கு துரித நடவடிக்கை

**அடுத்த வாரம் முதல் ஆரம்பம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

Public Utilities Commission of Sri Lanka (PUCSL)

மின்சார கட்டண திருத்தம் தொடர்பான யோசனை தொடர்பில் பொது மக்களின் கருத்துகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


மின் கட்டணத்தில் திருத்தத்தை மேற்கொள்ளும் யோசனையை மின்சார சபை, ஆணைக்குழுவுக்கு

06

## களனி கங்கையில் நீராட சென்று முதலைக்கு பலியான சிறுவன்

**அம்பத்தலை பகுதியில் சடலமாக மீட்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



களனி கங்கையில் நீராடச் சென்று முதலைக்குப் பலியான ஒன்பது வயது சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிறுவனை தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இரவு அம்பத்தலை நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அருகிலிருந்து சிறுவனின் சடலம்

06

## நீர் கட்டணம் செலுத்தாத சுமார் 80,000 விநியோகம் துண்டிப்பு

**1,909 மில்லியன் ரூபா நிலுவையில்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நீர் கட்டணத்தை செலுத்தாதன் காரணமாக 80 ஆயிரம் நீர்ப் பாவனையாளர்களின் நீர் விநியோகம் கடந்த வருடத்தில் துண்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க 30 இலட்சம் நீர்ப் பாவனையாளர்களில் 80,970 பேரின் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த சபையின் உயரதிகாரியொருவர்

06

# நகர்வலம்



அநுராதபுரம் ஓயாமடுவ பகுதி 85 ஏக்கரில்

## தனியார் நிறுவனத்தின் அனுசரணையுடன் மருந்து உற்பத்தி தொழிற்சாலை நிர்மாணம்

### அடிக்கல் நாட்டு விழாவில் மாகாண ஆளுநர்கள் பங்கேற்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**



அநுராதபுரம் ஓயாமடுவ பகுதியில் 'லைப் பபோ டெக்' தனியார் நிறுவனத்தின் அனுசரணையுடன் மருந்து உற்பத்தி தொழிற்சாலையொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் மற்றும் வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோரின் இணைத் தலைமையில் கடந்த (12) நடைபெற்றது.

சகல வசதிகளையும் கொண்ட 21 மருந்து தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கு ஓயாமடுவ தேசத்திற்கு மகுடம் பகுதியில் 85 ஏக்கர் நிலப் பரப்பில் இந்நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் அடிப்படையில் நேரடியாக 2000 தொழில் வாய்ப்புகளும் மறைமுகமாக 5000 தொழில் வாய்ப்புகளும் கிடைக்கவிருக்கின்றன. தற்போது நாட்டிற்கு மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்காக 120 மில்லியன் நிதியினை அரசு செலவிட்டு வருவதுடன் இலங்கையில் 20 வீதமான மருந்து வகையே உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த மருந்து உற்பத்தி தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இலவசமாக 80 வீதம் மருந்து வகையினை உற்பத்தி செய்ய முடியும். இதில் 20 வீதம் ஏற்றுமதி செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதனூடாக கூடுதலான வெளிநாட்டு முதலீட்டினை நாட்டுக்கு பெற்றுக் கொள்வதற்கும் எதிர்ப்பாக்கப்பட்டுள்ளது.



சீனன்கோட்டை இரத்தினக்கல் ஆபரண வர்த்தக சங்கத்தின் (CGJTA) ஏற்பாட்டில் சர்வதேச மாணிக்கக்கல் வர்த்தக கண்காட்சி பெந்தோட்டை பீச் ஹோட்டலில் மூன்று தினங்களாக அண்மையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. உள்நாட்டு வெளிநாட்டு மாணிக்க வியாபாரிகள் கலந்துகொண்ட இக்கண்காட்சியின் இரண்டாம் நாள் நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அமைச்சர் ரமேஷ் பதிரன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட கலந்துகொண்ட முக்கியஸ்தர்களையும் படங்களில் காணலாம்.

## 'நஜ்மி சாதனையாளர்' விருது வழங்கும் விழா

கொழும்பு வாழைத்தோட்டம் அல் மஸ்ஜித் நஜ்மீ ஜும்ஆப் பள்ளிவாசல் ஏற்பாடு செய்துள்ள 'நஜ்மீ சாதனையாளர் விருது' வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 08.30 மணிக்கு மருதானை டவர் மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தொழிலதிபர் எச்.எம். ஹனீபா நஜீப் கலந்து கொள்வார். கௌரவ அதிதிகளாக, அப்துல்லாஹ் பாதணிகள் தொழிற்சாலை உரிமையாளர் சி.எம். நூர், டி.எப்.ஹோல்டிங் நிறுவனத்தின் பணிப்பாளர் எம். நசூல்தீன் ஆகியோர் கலந்து கொள்வர். நிகழ்வில் கௌரவப் பேச்சாளராக கொழும்பு மத்திய ஜம்இய்யத்துல் உலமாவின் உப தலைவரும் மத்ரஸத்துல் அரூஸிய்யா விரிவுரையாளருமான அல் ஹாபிழ் மௌலவி இர்ஷாத் உவைஸ் (இன்ஆமி) கலந்து கொள்வார்.

பொலிஸ் உத்தியோகத்தரின்

## ATM அட்டையை திருடி பொருள் கொள்வனவில் ஈடுபட்ட நபர் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வங்கி ஏ.ரி.எம் அட்டையை திருடி பொருட் கொள்வனவில் ஈடுபட்டதாக கூறப்படும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை அநுராதபுரம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கதுருவெல மன்னம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் அநுராதபுரம் பகுதியில் உள்ள அரச வங்கியில் ஏ.ரி.எம் இயந்திரத்திலிருந்து பணத்தை எடுப்பதற்காக வரிசையில் நின்றுகொண்டிருந்த போது பின்பாக நின்றுகொண்டிருந்த சந்தேக நபர் அவரது வங்கி அட்டையை திருடி தப்பிச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டிற்கமைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் திருடிய ஏ.ரி.எம் வங்கி அட்டையிலிருந்து 41,000 ரூபாவிற்கும் அதிகமான பொருட்களை கொள்வனவு செய்துள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## அவுஸ்திரேலிய தலைநகரில் நாளை கலாசூரி சிவகுருநாதன் நூல் வெளியீடு



கலாசூரி இ.சிவகுருநாதனின் ஊடகப் பணியை கௌரவிக்கும் முகமாக அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' என்று நூல் நாளை சனிக்கிழமை வெளியிடப்படவுள்ளது.


தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதனின் இருபதாம் ஆண்டு நினைவு நூலான 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' வெளியீட்டு விழா நாளை 20.01.2024 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு அவுஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் நடைபெறவுள்ளது. கன்பராவில் உள்ள தமிழ் மூத்த பிரஜைகள் சங்க மண்டபத்தில் (Tamil Senior Citizen Hall,11 Bromby Street, Isaacs ACT 2607) சட்டத்தரணி, இலக்கிய ஆர்வலர், எழுத்தாளர் க. திருவருள் வள்ளல் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

தினகரன் பத்திரிகையில் நீண்ட காலம் பிரதம ஆசிரியராக பணியாற்றிய கலாசூரி இ.சிவகுருநாதன் மிக இலகுவான மொழியில் எல்லோருக்கும் புரியக்கூடிய வகையில் கருத்துக்களை சொல்வதில் வல்லவர். தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலைநிறுத்தியமை அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூலின் தொகுப்பாசிரியரான ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்குவார்.

இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூல் வெளியாகி உள்ளது.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக தொடர்கின்றது என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக (08/08/2003) "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூலை 'ஐங்கரன் விக்கினேஸ்வரா' தொகுத்துள்ளார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சொற்பொழிவு



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பேராசிரியர் க.கைலாசபதி நினைவுச்சொற்பொழிவு இன்று 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத்தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. "திராவிட கருத்தியல் திரள்வும் ஆறுமுகநாவலரும்" என்னும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலை வரலாறு, நுண்கலைத்துறை முதுநிலை விரிவுரையாளர் பாக்கியநாதன் அகிலன் உரை நிகழ்த்தவுள்ளார்.

## சத்திர சிகிச்சைக்கு உதவி கோரல்

குருநாகல் மாவட்டம், கொபெய்கனே பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெல்பொதுவெவயில் வசிக்கும் இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான ஆர்.முஹம்மத் ரஸீன் என்பவர் இரு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் தற்போது இரண்டு நாளுக்கொருமுறை இரத்த மாற்று சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். இவரை பரிசோதனை செய்த விசேட வைத்திய நிபுணர் இவருக்கு சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் எனவும் இதற்கென பெருந்தொகைப் பணம் செலவாகுமெனவும் பரிந்துரை செய்துள்ளார்.

மிகவும் வறிய குடும்பத்தை சேர்ந்த அவரது குடும்பத்தினரால் நிதியை திரட்ட முடியாததால் பரோபகாரிகளின் உதவியை குடும்பத்தினர் நாடுகின்றனர். உதவி செய்ய விரும்புவோர் இலங்கை வங்கி 85335513 கணக்கு இலக்கத்துக்கு வைப்பிலிடுமாறும் மேலதிக விபரங்களுக்கு 0702583676 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.



மெக்டயில்ஸ் லங்கா நிறுவனத்தின் இருபத்தொன்பதாவது காட்சியறை தென்னிலங்கையின் ஹிக்கடுவையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தன, நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மிஸ்வர் மகீன், பிரதம நிறைவேற்று அதிகாரி சிமர் மில்பர் உள்ளிட்ட பிரமுகர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## புறக்கணிக்கப்பட்டுள்ள மௌலவி ஆசிரியர் நியமனங்கள் மீண்டும் வழங்கப்பட வேண்டும்

### புத்தளம் உலமா சபைத்தலைவர் மஹ்மூத் ஹஸரத்

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



புத்தளம் காஸிமிய்யா மத்ரஸாவிலிருந்து இவ்வாண்டு மதீனா சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 8 மாணவர்களை பாராட்டும் நிகழ்வு மத்ரஸா மஹ்மூத் ஹஸரத் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (14) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட கல்லூரியின் அதிபரும் புத்தளம் மாவட்ட உலமா சபைத் தலைவருமான அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் அங்கு உரையாற்றுகையில், புறக்கணிக்கப்பட்டுள்ள மௌலவி ஆசிரியர் நியமனங்கள், காலம் தாழ்த்தாது மீண்டும் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கூறினார்.

காஸிமிய்யா பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில், உலமாக்கள், கல்வியியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், ஊடகத்துறை சார்ந்தோர், பழைய மாணவர்கள் என ஏராளமான முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

அதிபர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இலங்கை அரபு மத்ரஸாக்கள் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு காலத்துக்கு தேவையான வகையில் மறுசீரமைப்புக்கான காத்திரமான பணிகள் முன்னைய காலங்களை விட தற்போது வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இது பாராட்டுக்குரியதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

இப்படியான இந்த கட்டத்திலாவது மௌலவி ஆசிரியர்களை நியமிப்பதற்கான முன்னெடுப்புக்களையும் சம்பந்தப்பட்ட ஆட்சியாளர்களும், அதிகாரிகளும், முஸ்லிம் அரசியல் தலைவர்களும், சமூக அமைப்புகளும் முன்னெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

உயர் கல்விக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கு அதிதிகளால் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## 'விளக்கே நீ விளக்கு' கவிதை நூல் வெளியீடு

மூத்த கவிஞரும் ஓய்வுநிலை ஆசிரியருமான கலாபூசணம் யோனகபுர ஹம்ஸாவின் 'விளக்கே நீ விளக்கு 'கவிதை நூல் வெளியீடு, எதிர்வரும் 24ஆம் திகதி புதன் கிழமை திக்குவல்லை மின்ஹாத் தேசிய பாடசாலை மஹ்மூத் மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ஏ.எம். மஷாயிர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் அல்ஹாஜ் எம்.ஜே.முஹம்மத், திக்குவல்லை கமால், எம்.ஆர். எம். ரிஸ்கி , செய்யது இஸ்மாயில் இமாம் ஆகியோர் உரையாற்றுவர்.

குவைத் நாட்டின் நிதியுதவியில்

## கம்பிரிகஸ்வெவ பிரதேசத்திற்கு புதிய குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம்

### இஷாக் எம்.பி, ஷெய்க் நூறுல்லாஹ்வினால் திறந்து வைப்பு

**கெக்கிராவ குறூப் நிருபர்**



அநுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதிக்குட்பட்ட கம்பிரிகஸ்கஸ்வெவ கிராமத்தில் அமைக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மக்கள் பாவனைக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை (14) வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான், அல் ஹிமா இஸ்லாமிய சமூக சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் (நளீமி) யிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் குவைட் நாட்டின் நிதியொதுக்கீட்டில் மேற்படி திட்டம் சுமார் 15 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இக்குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் கம்பிரிகஸ் வெவ பிரதேசத்தில் வசிக்கும் 250 இற்கும் அதிகமான குடும்பங்கள் பயன்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தாதியர் பயிற்சி; 3863 பேர் விண்ணப்பம்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

அரச வைத்தியசாலைகளில் நிலவும் தாதியர்கள் குறைபாடுகளை நிறைவு செய்யும் வேலைத்திட்டத்தின் பிரகாரம் மாணவர் தாதி பயிற்சி நெறிக்கு பயிலுனர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இந்த பயிற்சி நெறிக்கு ஆட்சேர்ப்புக்காக சுமார் 3863 விண்ணப்பதாரிகள் சுகாதார அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாதி பயிற்சி நெறிக்காக கடந்த செப்டம்பர் மாதம் பதினைந்தாம் திகதிய அரச வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. இதற்கான நேர்முகப் பரீட்சைகள் இம்மாதம் 13 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் பன்னிரண்டு நிலையங்களில் குறிப்பிட்ட தினங்களில் இடம்பெற்று வருகின்றன. மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பு சுகாதார அமைச்சில் இடம்பெறுகின்றது. ஏனைய மாவட்டங்களின் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சை குறிப்பிட்ட மாகாணங்களின் தலை நகரங்களில் அமைந்துள்ள தாதி பயிற்சி பாடசாலைகளில் இடம்பெறுகின்றன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜனவரி 19 வெள்ளிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
சுபஹ் - 05.08
லுஹர் - 12.22
அஸர் - 03.44
மஃரிப் - 06.15
இஷா - 07.29

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் தை 05
ராகுகாலம் : பகல் : 11.05 - 12.35வரை
சுபநேரம் : காலை : 06.35 - 08.05வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

அனுபவமில்லாத ஒருவரை

# ஜனாதிபதியாக நியமித்து நாட்டை மீள ஆபத்துக்குள் தள்ள முடியாது

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அனுபவமில்லாத ஒருவரை ஜனாதிபதியாக நியமித்து நாட்டை மீண்டும் ஆபத்துக்குள் தள்ள முடியாது என ஆளும் கட்சியின் பிரதம கொரடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு, நாட்டை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வருவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவது சிறந்தது என்பதே தமது தனிப்பட்ட நம்பிக்கை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் நேற்று கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரபல தொழிலதிபரான தம்மிக்க பெரேரா ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கப் போவதாக அவரே தெரிவித்து வருவதாகவும், அது தொடர்பில் கட்சியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பொதுஜன பெரமுன கட்சியானது பிரபல தொழிலதிபர் தம்மிக்க பெரேராவுடன் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எந்தவித இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான பேச்சுவார்த்தை அவருடன் நடத்தப்பட்டதாகவும் நான் அறியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




சுவிற்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் உலக பொருளாதார மன்றத்துடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சுவிற்ஸர்லாந்து ஜனாதிபதி வயோலா அம்ஹெர்டிற்கும் ( Viola Amherd) இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது.



சுவிற்ஸர்லாந்து டாவோஸ் நகரில் நடைபெறும் உலக பொருளாதார மாநாட்டுக்கு இணையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஷ்டலினா ஜோர்ஜியாவா (Kristalina Georgieva) மற்றும் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத் (Gita Gopinath) ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது. பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவும் உடனிருந்தார்.

# இந்திய உயர்ஸ்தானிகர், சபாநாயகருடன் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை கடந்த செவ்வாய்க்கிழமை (16) பாராளுமன்றத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவும் பங்கேற்றிருந்தார்.
இந்தச் சந்திப்பில் புதிய உயர்ஸ்தானிகருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த சபாநாயகர், இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் வழங்கிவரும் ஒத்துழைப்புக்களுக்கு நன்றி தெரிவித்தார். இலங்கை இக்கட்டான சூழலை எதிர்கொண்டிருந்தபோது இந்தியா வழங்கிய அனைத்துவிதமான உதவிகள் குறித்து நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.

# ரூ. 11,500 போலி நாணயத்தாள்கள் வைத்திருந்த வான் சாரதி கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்**


போலி நாணயத்தாள்களை தம்வசம் வைத்திருந்த நபரொருவரை நல்லதண்ணி பகுதியில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லதண்ணி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் குழுவொன்று சந்தேகத்தின் பேரில் நபரொருவரை சோதனையிட்ட போதே குறித்த போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிவனொளிபாதமலை யாத்திரைக்கு செல்லும் குழுவொன்றை ஏற்றிவந்த வான் ஒன்றின் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வர்த்தக நிலையமொன்றின் உரிமையாளர் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே சம்பந்தப்பட்ட சாரதியை சோதனையிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அவரிடமிருந்து 11 ஆயிரம் ரூபா நோட்டுகளையும், ஒரு 500 ரூபா நோட்டையும் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேக நபர் அது தொடர்பில் பொலிஸாரிடம் தெரிவிக்கையில் தனது வானில் பயணம் செய்தவர்கள் கட்டணமாக அந்த போலி நாணயத்தாள்களை தமக்கு வழங்கியதாகவும் அது போலி நாணயத்தாள் என்று தனக்கு தெரியாத நிலையிலேயே அதனை பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் 43 வயதுடைய வலஸ்முல்ல பிரதேசத்தை சேர்ந்தவர். இது தொடர்பாக நல்லதண்ணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



GI 34G தகடு வெட்டுதல் மற்றும் கூரை தகடு தயாரிப்பு சேவைகள்
பாணந்துறை
0773976909

# சாரதி அனுமதிப்பத்திர பிரச்சினைகள் ஒக்டோபர் மாதத்துடன் தீர்க்கப்படும்

## ஒருநாள் சேவையூடாக தற்காலிக அனுமதிப்பத்திரத்துக்கு பதில் புதியவை
## போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன

தற்போது வழங்கப்பட்டுள்ள தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துக்குப் பதிலாக எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்குள் ஒருநாள் சேவையினூடாக வழமை போன்று சாரதி அனுமதிப்பத்திர அட்டை வழங்கப்படுமென போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்தார்.



சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் 25 மாவட்ட அலுவலகங்களும் இந்த வருட இறுதிக்குள் வெரஹெர தலைமை அலுவலகத்தின் நிலைக்கு மேம்படுத்தப்படுமெனவும் இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ், நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி, செயற்திறன் மிக்க போக்குவரத்து சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதே எமது அமைச்சின் பிரதான நோக்கமாகும்.

எமது நாட்டில் சுமார் 8.9 மில்லியன் வாகனங்கள் பாவனையில் உள்ளன. அதேபோன்று சுமார் 85 இலட்சம் சாரதிகள் அனுமதிப்பத்திரம் பெற்றுள்ளனர். சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் இந்த ஆண்டு இறுதிக்குள் வெரஹெர தலைமை அலுவலகத்தின் தரத்துக்கு மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், ஏப்ரல் மாதத்துக்குள் விமான நிலையத்தில் வெளிநாட்டவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது வழங்கப்பட்டுள்ள தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துக்குப் பதிலாக எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்குள் ஒருநாள் சேவையினூடாக வழமை போன்று அனைவருக்கும் சாரதி அனுமதிப்பத்திர அட்டை வழங்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றார்.

சட்ட விரோதமான நடவடிக்கைகளுக்காக தனிப்பட்ட கணக்குகளை தவறாகப் பயன்படுத்தல்

- வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களுக்காக தனிப்பட்ட வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்துவது பொதுவாக விதந்துரைக்கப்படாத வேளையில், சில சிறிய மற்றும் முறைசாரா வியாபாரங்கள் வசதி கருதி அல்லது சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும் தனியான வியாபாரக் கணக்குகளைப் பேணுவதிலுள்ள நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு போதியளவில் இல்லாமை காரணமாக, அவ்வாறு செய்வதனை தெரிவுசெய்கின்றன.
- வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களுக்காக தனிப்பட்ட கணக்குகளைப் பயன்படுத்துவது அதிகளவு புத்திசாலித்தனமானதோ அல்லது தொழில்சார் அணுகுமுறைக்குரியதோ அல்ல என்பதனைப் புரிந்துகொள்வது முக்கியமானதாக இருப்பதுடன், இது, பல்வேறு சவால்களுக்கும் இடர்நேர்வுகளுக்கும் இட்டுச்செல்லும்.
- காத்திரமான நிதியியல் முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு, நீங்கள் வியாபாரமொன்றினைத் தொழிற்படுத்துகின்றவராக இருப்பின் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்களுக்காக தனியான வங்கிக் கணக்கொன்றினைப் பயன்படுத்துவது பொதுவாக மதியுடைய செயலாக இருக்கும். இது, வெளிப்படைத்தன்மையினையும் தனிப்பட்ட மற்றும் வியாபார நிதிகளை வெவ்வேறாகப் பேணுவதற்கு உதவும்
- கலப்பான நிதியிடல்கள் சட்ட மற்றும் வரிச் சிக்கல்களுக்கு வழிவகுத்து, வியாபார நிதிகளைக் காத்திரமான முறையில் கண்டறிந்து முகாமைப்படுத்துவதில் சவால்களை உருவாக்கும்.
- கலப்பான தனிப்பட்ட மற்றும் வியாபார நிதியங்கள் பணம் தூயதாக்கல் தொடர்பான சந்தேகங்கள், குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் புலன்விசாரணைகளைத் தோற்றுவிக்கக்கூடிய கடுமையான குற்றங்களுக்கும் வழிவகுக்கலாம்.
- சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்கும் நிதியியல் வெளிப்படைத்தன்மையினைப் பேணுவதற்கும் பிரத்தியேகமான வியாபாரக் கணக்குகளை நிறுவிக்கொள்ளுமாறு விதந்துரைக்கப்படுகிறது.
- தனித்தனியான தனிப்பட்ட மற்றும் வியாபார நிதிகள், எளிமைப்படுத்தப்பட்ட நிதியியல் முகாமைத்துவம் பாதுகாப்பான தனிப்பட்ட சொத்துக்கள் என்பனவற்றை உறுதிப்படுத்துவதுடன் தொழில்சார் நம்பகத்தன்மையினையும் அதிகரிக்கிறது.

பணிப்பாளர்
இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

0112477125 0112477692 fiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk

# இலங்கையில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க கோரிக்கை

## அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்

இலங்கை கடற்படையினரால் தமிழக கடற்றொழிலாளர்கள் படகுகளுடன் தொடர்ந்து கைது செய்யப்படுவது தொடர்பாகவும் கைது செய்யப்பட்ட தமிழக கடற்றொழிலாளர்களை படகுகளுடன் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் ஸ்டாலின் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலினின் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இலங்கை கடற்படையினரால் தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்கள் அவர்களின் மீன்பிடிப்படகுகளுடன் தொடர்ந்து கைது செய்யப்படுகின்றமை தொடர்பாகவும் எனது ஆழ்ந்த வேதனையை தெரியப்படுத்துகின்றேன்.





நாகபட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 13.01.2024 அன்று கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற 10 கடற்றொழிலாளர்களை அவர்களின் விசைப்படகுடன் இலங்கை கடற்படையினர் 15.01.2024 அன்று கைது செய்துள்ளதுடன், மற்றொரு சம்பவத்தில் இராமநாதபுரம், பாம்பன் இடத்தைச் சேர்ந்த 18 மீனவர்களை அவர்களின் இரண்டு விசைப்படகுகளுடன் 16.01.2024 அன்று இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்கள் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டுள்ளதுடன், இத்தகைய கைது நடவடிக்கைகள் மீன்பிடித் தொழிலை மாத்திரமே தமது வாழ்வாதாரமாக நம்பியுள்ள கடற்றொழில் சமூகத்தினரிடையே பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்கியுள்ளது.

இவ்வாறான கைது நடவடிக்கைகளை தடுக்க இலங்கை அரசாங்கத்துக்கு வலியுறுத்த வேண்டுமென்பதுடன், இலங்கையில் கட்டுப்பாட்டிலுள்ள படகுகளையும் விடுவிக்க உரிய காலஅவகாசத்தை விதிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 07




# வளியின் தரத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி

நாட்டின் சில பிரதேசங்களில் கடந்த சில தினங்களாகக் காலை வேளையில் மூடு பனி போன்ற வானிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்தோடு இலேசான குளிர்த்தன்மையையும் உணர முடிகிறது. இது வழமையான மூடுபனி எனப் பலரும் கருதுகின்றனர். ஆனால் இது உண்மையான மூடுபனி அல்ல.

இவ்வாறான வானிலைக்கு கடந்த சில வருடங்களாக இலங்கை முகம் கொடுக்கிறது. குறிப்பாக நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் இவ்வானிலை பெரும்பாலும் ஏற்படக் கூடியதாக உள்ளது. ஆனால் இது உண்மையான மூடுபனி அல்ல என்று இலங்கை வளி மண்டலவியல் திணைக்களமும் அறிவித்துள்ளது. தற்போது பதுளை, பண்டாரவளை போன்ற சில பிரதேசங்களில் மூடுபனி நிலை காணப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு குறிப்பிட்டுள்ள வளிமண்டலத் திணைக்களம், வளி மாசடைந்திருப்பதன் வெளிப்பாடே இது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள வளி மாசு இலங்கையின் வளிமண்டலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அதனால் தான் இந்த மூடுபனி நிலை ஏற்பட்டிருக்கிறது.

தற்போது இந்தியாவின் வட மாநிலப் பிரதேசங்களில் காற்று மாசு அதிகரித்து காணப்படுகிறது. குறிப்பாக பஞ்சாப், புதுடில்லி, ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களில் வேளாண்மைச் செய்கையின் அறுவடையின் பின்னர் மீள் செய்கைக்காக நிலத்தை விவசாயிகள் தயார்படுத்துவது வழமையாகும். அதன் விளைவாக வெளிப்படும் தூசு துகள் வளிமண்டலத்தில் கலக்கின்றன.

இவ்வாறு காற்றில் கலக்கும் தூசு துகள்கள் காற்றோட்டத்தின் ஊடாக வங்காள விரிகுடாவை நோக்கி அள்ளுண்டு பயணிப்பதோடு அங்கிருந்து கிழக்கு வழியாக இலங்கைக்குள் பிரவேசிக்கின்றன. அதனால் தான் இந்நாடு இந்த வானிலைக்கு முகம் கொடுத்திருக்கிறது.

இந்தியாவின் சில பிரதேசங்களிலும் தற்போது கடும் பனிமூட்டம் போன்ற நிலை ஏற்பட்டிருப்பதும் இங்கு சுட்டிக்காட்டதக்கதாகும்.

உலகில் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளும் பிரதேசங்களும் பிரிக்கப்பட்டுள்ள போதிலும் வளிமண்டலத்தில் அவ்வாறான பிரிவுகள் இல்லை.

அதனால் தான் இலங்கையில் இருந்து பல ஆயிரம் கிலோ மீற்றர்களுக்கு அப்பால் ஏற்பட்டுள்ள காற்று மாசு கூட இங்கு வந்து சேர்கின்றன. ஆனால் வளி மாசு சுவாசத் தொகுதி தொடர்பான நோய்களுக்கு பங்களிக்கக்கூடியதாகும். அதனால் தான் மாசடைந்த வளியைத் தொடராகவும் நீண்ட காலத்திற்கும் சுவாசிக்கக்கூடாதென சுவாசத் தொகுதி தொடர்பான மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் தற்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் சுவாசத் தொகுதியுடன் தொடர்பான தடிமன், தும்மல் போன்ற உபாதைகளுக்கு உள்ளாகியுள்ளவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டு இருக்கின்றது. இது பருவ கால மாற்றத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள நோய்கள் எனக் கருதப்படுகிறது. ஆனால் இந்நோய்களுக்கு வளி மாசு அதிக பங்களிப்பு நல்கியுள்ளதாகவே நம்பப்படுகிறது.

இதேவேளை கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேசங்களின் காற்றின் தரம் மோசமாகப் பதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபை, மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

உண்மையில் வளியின் தரம் வீழ்ச்சி அடைவதும் வளி மாசடைவதும் மனித ஆரோக்கியத்திற்கு உகப்பானதல்ல. மனிதனின் வாழ்வே வளியின் ஒட்சிசனுடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது. அதனால் மனித உயிர்வாழ்வுக்கு தூய வளி மிகவும் இன்றியமையாததாகும்.

அதன் காரணத்தினால் வளியின் தரம் வீழச்சியடையவும், வளி மாசு அதிகரிக்கவும் துணை போகவே கூடாது. அது மனித உயிர்வாழ்வுக்கு விடுக்கப்படும் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துவிடும். அதனால் வளியின் தரத்தைப் பேணுவதற்கு ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும். அதனை மிக முக்கிய பொறுப்பாகக் கருத வேண்டும். வளி மாசடைய எந்த சந்தர்ப்பத்திலும் துணை போகலாகாது.

என்றாலும் ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இடம்பெறும் தவறானதும் பலவீனமானதுமான செயற்பாடுகளால் வளியின் தூய தன்மையைப் பேணும் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் கூட அசுத்தமடைந்த வளியைச் சுவாசிக்கும் நிலைக்கு முகம் கொடுக்கும் நிலை நிலவுகிறது. இது கைத்தொழில் வளர்ச்சியின் விளைவாக மனித சமூகம் முகம் கொடுத்துள்ள தீமைகளில் ஒன்றாகும். ஆனாலும் இந்தத் தீமையைத் தவிர்த்து வளியின் தூய்மையைப் பேண அனைத்து தரப்பினரதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் இன்றியமையாததாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையில் முதலீட்டு வாய்ப்பு குறித்து சுவிஸில் வட்டமேசை கலந்துரையாடல்

இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் அரச நிறுவனங்களில் தனியார் முதலீட்டை மேற்கொள்ளுமாறு இந்தியாவின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொலைத்தொடர்பு, நிதிச் சேவைகள் மற்றும் எரிசக்தி போன்ற இலங்கையின் முக்கிய துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்திய தொழில்துறை கூட்டமைப்பு (Confederation of Indian Industry ) மற்றும் உலக பொருளாதார மன்றம் இணைந்து கடந்த 16 ஆம் திகதி சுவிட்சர்லாந்தில் ஏற்பாடு செய்திருந்த வட்டமேசை கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் பல முக்கிய சவால்களை இலங்கையினால் வெற்றிகொள்ள முடிந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது,வலியுறுத்திக் கூறினார்.

இலங்கையின் பரந்த பொருளாதார நோக்கு குறித்து விளக்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விநியோகத்துக்கான தடைகளுக்கு வெற்றிகரமாக தீர்வு வழங்கல், இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் அந்நிய செலாவணி பணப்புழக்கத்தை சீராக்குதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளின் மூலம் சவால்களை குறுகிய காலத்தில் சமாளிக்க முடிந்தது என்று சுட்டிக்காட்டினார்.

இலங்கை தனது வர்த்தக உடன்படிக்கைகளை தீவிரமாக விஸ்தரித்து வருவதாகவும், அதற்கமைவாக இலங்கை அண்மையில் சிங்கப்பூருடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும், தாய்லாந்துடன் பெப்ரவரி மாதம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதற்காக இந்தியா, சீனா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும், இதனூடாக உலகளாவிய பொருளாதார ஒருங்கிணைப்புக்கு இலங்கை அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கடற்கரையை அண்டியதாக காற்றாலை மற்றும் சூரிய சக்தி குறித்து கவனம் செலுத்தி புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களுக்கு இந்தியாவுடன் ஒத்துழைப்பதன் மூலம் நிலையான ஆற்றல் தீர்வுகளில் இலங்கை கவனம் செலுத்தியுள்ளது என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அதிக திறன் கொண்ட இருதரப்பு மின்சார இணைப்பை ஏற்படுத்துவதற்கு உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்தியாவுடனான பண்டங்கள் மற்றும் சேவைகள், சுங்க ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக வசதிக்கான திட்டங்களை முன்வைத்து இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக கொடுக்கல் வாங்கல்களுக்கு இந்திய ரூபாயைப் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, கல்வி, கலாசார ஒத்துழைப்பை மேம்படுத்துவதுடன் சுற்றுலா மற்றும் சமூக உறவுகளை மேம்படுத்த இலங்கை எதிர்பார்ப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளுடனான இந்த வட்டமேசை கலந்துரையாடலில், விநியோகச் சங்கிலித் திறனை மேம்படுத்துதல், சுகாதாரம், நுகர்வுப் பொருட்கள், தொலைத்தொடர்பு சேவைகள் மற்றும் பசுமை ஆற்றல் போன்ற துறைகளில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை, பல்வேறு முதலீடுகளுக்கு சிறந்த இடமாக நிலை நிறுத்தப்பட்டுள்ளதுடன், டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் முக்கிய வாய்ப்புகள் உள்ளதோடு, உட்கட்டமைப்பு வினைத்திறனை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்புடன் செயற்படும் திறன் உள்ளதாகக் குறிப்பிட்டார்.








இந்திய நிறுவனத் தலைவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பு

# பிள்ளைகள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு கல்வி ஒன்றே வழி

## ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க

பிள்ளைகள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு கல்வி ஒன்றே வழி என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வலியுறுத்தினார்.

கல்வியை வெற்றிகரமாக நிறைவு செய்வதன் ஊடாக நாட்டில் அறிவுள்ள பிரஜைகள் உருவாகுவார்கள் எனவும், அது நாட்டின் வெற்றியில் நேரடியாக தாக்கத்தைச் செலுத்தும் எனவும் ஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

நவகத்தேகம கோங்கடவல வித்தியாலயத்திற்கு சகல வசதிகளுடன் கூடிய நூலகத்தை வழங்கும் நிகழ்வில் (15.01.2024) கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சீன நிதியுதவியின் கீழ் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டுதலின் பேரில் ஜனாதிபதியின் அலுவலகத்தின் மூலம் நவகத்தேகம கோங்கடவல வித்தியாலயம் மற்றும் நீர்கொழும்பு தூவ ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றுக்கு சகல வசதிகளுடன் கூடிய இரண்டு நூலகங்கள் வழங்கப்பட்டன.



ஒரு நூலகத்திற்காக செலவிடப்பட்டுள்ள தொகை இரண்டு மில்லியன் ரூபாவாகும். இந்த நூலகங்களில் தரம் 6 முதல் தரம் 11 வரையிலான மாணவர்களின் கல்விக்குத் தேவையான பல்வேறு புத்தகங்கள் உள்ளன.

பொருளாதாரச் சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்கும் கிராமப்புற மாணவர்களுக்கு உதவுவதும், அறிவாற்றலுடன் கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்குவதும் இத்திட்டத்தின் முதன்மை நோக்கங்களாகும்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இலங்கைக்கான சீன துணைத் தூதுவர் என்னிடம் நான்கு மில்லியன் ரூபா பெறுமதியான செயற்திட்டத்திற்கு உதவி வழங்க வாய்ப்பு உள்ளதாகத் தெரிவித்தார்.இரண்டு பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து இரண்டு நூலகங்களை வழங்க நினைத்தேன்.

இந்தப் பாடசாலைகளுக்கு நூலகங்களை வழங்க நினைத்ததற்கு விசேட காரணம் இருந்தது. அடுத்த பத்து ஆண்டுகளில் இந்தப் பாடசாலைகளுக்கு வருகை தரும் மாணவர்கள் இந்த நூலகங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளலாம். நானும் எனது ஆரம்பக் கல்வியை இப்படி ஒரு சிறிய பாடசாலைதான் கற்றேன். எனவே, இந்தப் பிள்ளைகளின் எதிர்காலத்தை இப்போதே கணிக்க முடியாவிட்டாலும், அவர்களின் வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்துவதற்கு தேவையான ஆதரவை வழங்க வேண்டும்.

எனக்குத் தெரிந்து இன்று இங்கு வந்திருக்கும் சீன துணைத் தூதுவரின் தந்தை ஒரு விவசாயி. சீன துணைத் தூதுவர் 8ஆம் வகுப்பு படிக்கும் போது அவரின் தந்தை விவசாயம் செய்யு மாறு கூறியிருக்கிறார்.

சுமார் ஒரு மணி நேரம் பயிர்ச்செய்கையில் ஈடுபடும்போது அவருக்கு முதுகில் வலி ஏற்பட்டது. முதுகுவலியை தந்தையிடம் சொன்னபோது, 'நன்றாகப் படிக்கவில்லை என்றால் இந்த வேலையைத்தான் செய்ய வேண்டி வரும்' என்று தந்தை கூறியிருக்கின்றார்.





அந்தப் பாடத்தை மனதில் கொண்டு இன்று துணைத்தூதுவராக வெற்றிகரமாக முன்னேறியுள்ளார். சர்வதேச நாடுகளில் தொழில் புரியும் நிலையை எட்டியுள்ளார். எனவே, வாழ்க்கையில் வெற்றி பெற கல்வி ஒன்றே வழி என்பதை இந்தப் பிள்ளைகள் மனதில் கொள்ள வேண்டும். கல்வியின்றி பிள்ளைகளுக்கோ நாட்டுக்கோ எதிர்காலம் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.'

இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ,பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, இலங்கைக்கான சீன துணைத் தூதுவர் யன்வாய் தூ (YANWAI ZHU) மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

# 'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்'

## ஏறாவூரில் இரத்ததான நிகழ்வு

'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் ஏறாவூர் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் செய்யட் அஹமட் தலைமையில் ஏறாவூர் அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையில் மாபெரும் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்ட வைத்திய சாலைகளின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் அவர்களும் கௌரவ அதிதிகளாக ஏறாவூர் நகரசபையின் விசேட ஆணையாளர் ஹமீம், ஏறாவூர் பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் தலைவர் முகைதீன், ஏறாவூர் ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவர் அஷ்செய்க் சாஜித் ஹுசைன், சமூக சேவை உத்தியோகத்தர் நஜிமுதீன், கிராம சேபை உத்தியோகத்தர் சீராஸ், சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஆலோசகர்களான முபாறக், றிபாய்தீன், ஹனீபா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.





வைத்தியர்கள் ,தாதி உத்தியோஸ்தர்கள், அதிகளவிலான குருதி கொடையாளிகள் இரத்ததான முகாமில் பங்கேற்றனர்.

எம்.ஐ.எம்.அஸ்ஹர்...
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)



# சகோதரத்துவம் ஓர் இஸ்லாமிய பார்வை

இஸ்லாம் ஒரு முழுமையான வாழ்க்கைத் திட்டம். சர்வ வல்லமை படைத்த அல்லாஹ்தஆலா வகுத்தளித்திருக்கும் இவ்வாழ்க்கை நெறி அல்லாஹ்விடம் மனிதனுக்காக அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகும். உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்குமான வாழ்க்கை நெறி இது. மனிதனின் ஆன்மீக, லௌஹீக வாழ்வு குறித்து ஆழ அகலமாகக் கவனம் செலுத்தி தெளிவான வழிகாட்டல்களை வழங்கிக் கொண்டிருக்கிறது இவ்வாழ்க்கைநெறி.

அந்த வகையில் மனிதனின் சமூக வாழ்வில் சகோதரத்துவத்திற்கு இஸ்லாம் அதிக முக்கியத்துவம் அளித்திருக்கிறது. சகோதரத்துவம் என்பது பொதுவாக பிறப்பை அடிப்படையாகக் கொண்டது. ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்கள் சகோதரர்களாவர்.

ஆனால் இஸ்லாம் இந்த சகோதரத்துவத்தை அங்கீகரித்துள்ள அதேநேரம் சகோதரத்துவத்தைப் பரந்த கண்ணோட்டத்துடன் நோக்கியுள்ளது. இஸ்லாத்தில் இறைநம்பிக்கையாளர்கள் அனைவரும் சகோதரர்களாவர். இதனை அல் குர்ஆன், **'நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் அனைவரும் சகோதரர்களே... (49:10)** என்றுள்ளது.

இதன்படி இஸ்லாத்தில் சகோதரத்துவம் என்பது நிலத்தையோ, நிறத்தையோ, மொழியையோ, பட்டம் பதவியையோ வசதி வாய்ப்புக்களையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. அவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கப்படுவதுமில்லை. வரையறை செய்யப்படுவதுமில்லை என்பது தெளிவாகிறது.

இறைவிசுவாசிகள் ஒருவருக்கொருவர் சகோதரர்களாவர். அவர் கருப்பரா, வெள்ளையரா, உயர்ந்தவரா, தாழ்ந்தவரா, மொழி ரீதியாகவும் நில ரீதியாகவும் வேறுபட்டவரா, பட்டம் பதவிகளில் ஏற்றத்தாழ்வு கொண்டவரா, ஏழையா பணக்காரரா, என்ற வேறுபாடு எதுவுமே பார்க்கப்படுவதுமில்லை. இப்பின்புலத்தில் இஸ்லாத்தைப் பின்பற்றும் கருப்பரும் வெள்ளையரும் சகோதரர்களாகின்றனர். அதேபோன்று முன்பின் அறிமுகமில்லாதவர்கள் மாத்திரமல்லாமல் அறிமுகமில்லாத மொழி பேசுபவர்களையும் இஸ்லாம் சகோதரர்களாக்கி வைத்திருக்கிறது.

இஸ்லாம் போதிக்கும் சகோதரத்துவத்தின் உண்மைத்தன்மையை நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட சகோதரத்துவ உடன்படிக்கை அர்த்தபூர்வமாக்கி வைத்துள்ளது. அது மனித வரலாற்றில் தடம்பதித்த உடன்படிக்கை என்றால் அது மிகையாகாது. அதாவது நபி (ஸல்) அவர்கள் மக்காவில் இருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற பிறகு தம்மோடு வருகை தந்த மக்காவைச் சேர்ந்த இறைவிசுவாசிகளுக்கும் இஸ்லாத்தை ஏற்று தம்மோடு இணைந்து கொண்ட மதீனா வாசிகளுக்கும் இடையில் முதலில் சகோதரரத்துவ உடன்படிக்கையை செய்து வைத்தார்கள். இவ்வாறு உடன்படிக்கை செய்து வைக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் முன்பின் அறிமுகம் இல்லாதவர்களாவர். அவர்களை இறை நம்பிக்கை தான் சகோதரர்களாக இணைத்து வைத்தது.

அதேநேரம் நபி (ஸல்) அவர்கள் சகோதரத்துவம் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் எடுத்தியம்பியுள்ளார்கள். அவற்றின் ஊடாக இறைநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட சகோதரத்துவத்தை அன்னார் வலியுறுத்தி ஊக்குவித்துள்ளார்கள். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், **'ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமுக்கு சகோதரர் ஆவார். அவரை அவர் துன்புறுத்தக்கூடாது (வெறுக்கக்கூடாது), மற்றவர்களின் தயவில் அவரை விட்டு விடவும் கூடாது'** என்று கூறியுள்ளார்கள்.

(ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)

இந்நபிமொழியும் இறைநம்பிக்கை சகோதரத்துவத்தின் முக்கிய அடிப்படை என்பதை எடுத்துக்காட்டுகிறது. இறைநம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவர்கள் ஒருவரை ஒருவர் வெறுக்கவும் முடியாது, ஒதுக்கவும் முடியாது, தனிமையில் விட்டுவிடவும் முடியாது. அடுத்தவரின் தயவில் விட்டிடவும் கூடாது. அந்தளவுக்கு வலுவானதும் இறுக்கமானதும் தான் இஸ்லாம் போதித்துள்ள சகோதரத்துவம்.

மற்றொரு தடவை நபி (ஸல்) அவர்கள், **'ஒருவருக்கொருவர் கருணை புரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் (உண்மையான) இறை நம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். (உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புக்களும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் (உடல் முழுதும்) காய்ச்சலும் கண்டு விடுகிறது'** என்றுள்ளார்கள்.

(ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இறைநம்பிக்கையாளர்கள் உண்மையில் அவ்வாறு இருக்க வேண்டியவர்கள். அதுவே இஸ்லாத்தின் போதனையாகும்.

ஒரு உடலின் ஏதாவது ஒரு உறுப்பில் சுகவீனம், வலி ஏற்பட்டால் அதனை முழு உடலும் உணர்வது போன்றும் ஒரு உறுப்புக்குக் கஷ்டம் ஏற்படும் போது, ஏனைய உறுப்புக்களும் அதற்கு உதவி செய்வது போன்றும் ஒரு முஃமினுக்குச் சிரமம் ஏற்பட்டால் ஏனைய இறை நம்பிக்கையாளர்களும் அவருக்கு உதவ வேண்டும். ஏனெனில் மனித வாழ்வில் இன்பம், துன்பம், கஷ்டம், சிரமம் என்பன ஏற்படுவதும் அவை மாறிமாறி வருவதும் இயல்பானது. அதனால் கஷ்டம், துன்பம் சிரமங்களுக்கு உள்ளாகும் இறைநம்பிக்கையாளர்களுக்கு ஏனைய இறைநம்பிக்கையாளர்கள் உதவி, ஒத்துழைப்புக்களை நல்க வேண்டும். உடல் உழைப்பில் மாத்திரமல்லாமல் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்விலும் உதவி ஒத்துழைப்புக்களை நல்குவது இறை நம்பிக்கையாளரின் பொறுப்பாகும். இதுவே இஸ்லாத்தின் வழிகாட்டலும் போதனையும் ஆகும்.

அதேநேரம், **''முஃமின்கள் தங்களிடையே நேசிப்பதற்கும், கருணை காட்டுவதற்கும், இணைந்திருப்பதற்கும் உதாரணமானதானது, ஓர் உடலைப் போன்றதாகும். அதில் ஏதேனும் ஓர் உறுப்பு நோயுற்றால் எல்லா உறுப்புக்களும் காய்ச்சலையும் தூக்கமின்மையையும் முறையிடுகின்றன'** (ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்), என்றும் **''முஸ்லிம்கள் ஒரே உடலைப் போன்றவர்கள். கண் வலியை முறையிட்டால் அனைத்து உறுப்புகளும் முறையிடுகின்றன. தலைவலியை முறையிட்டால் அனைத்து உறுப்புக்களும் முறையிடுகின்றன'** (ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்) என்றும் கூட நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மற்றொரு சந்தர்ப்பத்தில், **'ஒரு முஃமின், மற்றொரு முஃமினுக்கு கட்டிடத்தைப் போன்றவராவார். அதில் ஒரு பாகம் மற்றொரு பாகத்திற்கு வலுச் சேர்க்கிறது'** (ஆதாரம்: ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம்) என்றும் நபி (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இவ்வாறு சகோதரத்துவத்தை வலியுறுத்தி வழிகாட்டியுள்ள இஸ்லாம், இறைநம்பிக்கையாளர்களுக்கு இடையிலான ஒற்றுமைக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளது. சகோதரத்துவம் பலமாகவும் இறுக்கமாகவும் இருப்பதற்கு ஒற்றுமை இன்றியமையாததாகும்.

இதனை அல் குர்ஆன், **'நம்பிக்கையாளர்களே... நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்பட வேண்டிய முறைப்படி உண்மையாகப் பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாக அன்றி நீங்கள் இறந்து விட வேண்டாம்'. (3:102)**

மேலும் **நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அல்லாஹ்வுடைய (வேதம் எனும்) கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். (உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு) நீங்கள் பிரிந்து விட வேண்டாம். (3:103)** என்று குறிப்பிட்டிருக்கிறது.

இஸ்லாம் சகோதரத்துவத்திற்கு அளித்துள்ள முக்கியத்துவம் வெளிப்படையானது, தெளிவானது. அது பரந்த கண்ணோட்டம் கொண்டது.

இருப்பினும் இஸ்லாம் சகோதரத்துவத்துக்கு அளித்துள்ள முக்கியத்துவத்தைப் பெரும்பாலானவர்கள் அறியாதவர்களாக உள்ளனர். அதன் விளைவாகவே சிரமங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் பொருளாதார கஷ்டங்களுக்கும் உள்ளாகியுள்ள இறைநம்பிக்கையாளர்கள் சமூகத்தில் அதிகரித்து காணப்படுகின்றனர். தான் உண்டு, தன் குடும்பம் உண்டு என்ற மனப்பான்மை முஸ்லிம்களில் அதிகரித்திருப்பது இதற்கு பெரிதும் பங்களித்துள்ளது. இஸ்லாம் போதித்துள்ள சகோதரத்துவம் வீழ்ச்சியடையவும் இது பெரிதும் உதவியுள்ளது. அதனால் இறைவிசுவாசிகளின் துன்பங்கள், நெருக்கடிகள் நீங்கவென தம்மைப் படைத்த இறைவனிடம் பிரார்த்தனை கூட செய்யாதவர்களாக சகோதர இறைவிசுவாசிகள் உள்ளனர். இது இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கு மாற்றமானதாகும்.

ஆகவே அல் குர்ஆனினதும் நபிமொழிகளதும் போதனைகளுக்கு அமைய சகோதரத்துவத்தைப் பேணுவது இன்றியமையாததாகும். அது இம்மையிலும் மறுமையிலும் நன்மைகள் பெற்றுத்தரக்கூடியதாக இருக்கும்.

மர்லின் மரிக்கார்...

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk



# நல்வாழ்வுக்கு வழிகாட்டும் அல் குர்ஆன்

மனிதனை நேர்வழிப்படுத்தி, பூமியில் அவன் எவ்வாறு வாழ வேண்டும், அவன் மறுமையை எவ்வாறு வெற்றி கொள்ள முடியும் என்பன குறித்து அழகிய முறையில் அல் குர்ஆன் வழிகாட்டுகிறது.

இற்றைக்கு 1400 ஆண்டுகளுக்கும் முன்பு அரபு மொழியில் அருளப்பட்ட இக்குர்ஆன் இதே போன்ற ஒரு நூலைக் கொண்டு வாருங்கள் என்று சவால் விடுத்திருக்கிறது. அதேநேரம் இக்குர்ஆனில் எங்கேனும் ஒரு தவறையேனும் கண்டுபிடித்து விடுங்கள் என்றுகூட அறைகூவல் விடுத்திருக்கிறது. இருந்தும் இந்த சவால்கள் எவராலும் எதிர்கொள்ளப்படவில்லை. எதிர்கொள்ளவும் முடியாது. ஏனெனில் இது அல்லாஹ்வினால் வகுத்தளிக்கப்பட்ட உண்மையான இறைவேதமாகும்.

**"அவர்கள் அல் குர்ஆனைப் பற்றி சிந்திப்பதில்லையா? இது அல்லாஹ்வை அன்றி வேறொருவரிடமிருந்து வந்திருந்தால் அதிகமான முரண்பாடுகளை இதில் கண்டிருப்பார்கள்". (அல் குர்ஆன் 4:82)** என்று அல்லாஹ்தஆலா குறிப்பிட்டிருக்கிறான்.

அதேநேரம் **"நாம் நம் அடியார் மீது இறக்கியுள்ள இ(வ்வேதத்)தைப் பற்றி (இது நம்மால் அருளப்பட்டதா, இல்லையா எனும்) சந்தேகத்தில் நீங்கள் இருப்பீர்களானால், இதைப் போன்ற ஒரே ஓர் அத்தியாயத்தையேனும் (உருவாக்கிக்) கொண்டு வாருங்கள்! (இதற்காக) அல்லாஹ்வைத் தவிர உங்களுக்குத் துணை புரிபவர்கள் அனைவரையும் அழைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உண்மையானவர்களாய் இருப்பின் (இதனைச் செய்து காட்டுங்கள்). (அல் குர்ஆன் 2:23)**

இது இறைவேதம் என்பதை அல் குர்ஆனே (12:1) குறிப்பிட்டிருக்கிறது. மனிதனை மிக உயரிய இலட்சியத்தின் பாலும் நேரான பாதையின் பாலும் வழிநடத்துவதற்காக அல்லாஹ் இக்குர்ஆனை இறக்கியருளினான். இதனை அல்லாஹ்வே, **"இது அளவிலாக் கருணையும், இணையிலாக் கிருபையும் உடைய இறைவனிடமிருந்து இறக்கியருளப்பட்டதாகும்" (அல் குர்ஆன் 41:2)** என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

**"நிச்சயமாக எவர்கள் தங்களிடம் வந்த நல்லுபதேசத்தை நிராகரிக்கின்றார்களோ (அவர்கள் மறுமையில் தங்கள் நிலைமையை உணர்ந்து கொள்வார்கள். ஏனென்றால்) நிச்சயமாக இது மிக கண்ணியமான வேதமாகும். ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் முஹம்மத் நபிக்கு அல்லாஹ் இறக்கியருளிய அதே முறையில் அதன் வசனங்களை இன்றும் மக்கள் ஓதுகின்றார்கள். செவிமடுக்கின்றார்கள். மனப்பாடம் செய்கிறார்கள். புரிந்துகொள்கின்றார்கள்". (திருக்குர்ஆன் 41:41).**

**அல்லாஹ்விடமிருந்து பேரொளி மிக்க, சத்தியத்தைத் தெளிவாக எடுத்துரைக்கின்ற அல் குர்ஆன் உங்களிடம் வந்துள்ளது". (அல் குர்ஆன் 5:15)**

**"அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை விரும்புவோருக்கு அல்லாஹ் அதன் (அல் குர்ஆன்) மூலம் சாந்திக்கான வழிகளைக் காண்பிக்கின்றான். மேலும், அவன் தனது கட்டளையைக் கொண்டு இருள்களிலிருந்து அவர்களை வெளியாக்கி ஒளியின் பக்கம் கொண்டு வருகிறான். இன்னும் அவர்களை நேர்வழியின் பக்கம் வழிகாட்டவும் செய்கின்றான்". (அல் குர்ஆன் 5:16).**

**"உண்மையில் இக்குர்ஆன் முற்றிலும் நேரான வழியினைக் காண்பிக்கிறது. மேலும், இதனை ஏற்றுக்கொண்டு நற்செயல் செய்பவர்களுக்குத் திண்ணமாகப் பெரும் கூலி உண்டு என்று இது நற்செய்தி அறிவிக்கிறது". (அல் குர்ஆன் 17:9)**

இக்குர்ஆனுக்கு என்று நோக்கங்களும் இலக்குகளும் உள்ளன. அதேபோன்று சரியான கொள்கை, இறைத்தன்மை, தூதுத்துவம், நற்கூலி, மனிதன் குறித்த யதார்த்தம், அவனுக்கு வழங்கப்பட்டிருக்கும் கண்ணியம், அவனது உரிமைகள் குறித்த முக்கியத்துவம், அதிலும் குறிப்பாக பலவீனமானவர்களின் உரிமைகள் குறித்தெல்லாம் விரிவாக எடுத்துரைக்கிறது அல் குர்ஆன்.

இறைவனுடன் மனிதன் தொடர்பில் இருக்க வேண்டும், அல்லாஹ்வை மட்டுமே அவன் வணங்க வேண்டும், அனைத்து விவகாரங்களிலும் அவனையே அஞ்ச வேண்டும் என்றும் இக்குர்ஆன் வலியுறுத்தி ஊக்குவிக்கிறது. உளத்தூய்மை குறித்தும் இக்குர்ஆன் எடுத்தியம்பியுள்ளது. உள்ளம் தூய்மை பெற்றுவிட்டால் சமூகம் தூய்மை பெறும் என்றும், உள்ளம் இருளடைந்தால் சமூகம் பாதிப்புறும் என்றும் இக்குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது.

அத்தோடு சமூகத்தின் கருவாக இருக்கும் குடும்ப அமைப்பு குறித்தும் குடும்பத்தின் தூணாக விளங்கும் பெண்ணிடம் நீதியுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்தும் எடுத்துரைக்கும் இக்குர்ஆன், சீர்திருத்தம் செய்யும் சமூக உருவாக்கம் குறித்தும் வலியுறுத்துகிறது. மனித குலத்திற்கான அமானிதம் அந்த சமூகத்திடம் தான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கு அவர்கள் சாட்சியாளர்களாகத் திகழ வேண்டும். காரணம், ஏனைய மக்களுக்கு பயன் தருவதற்காகவும் அவர்களுக்கு நேர்வழி காட்டுவதற்காகவும் மட்டுமே இவர்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளனர்.


ஒருவருக்கொருவர் அறிமுகமாகுங்கள், வெறுக்காதீர்கள், சகிப்புத்தன்மையைக் கடைபிடியுங்கள், `இனவாதம் வேண்டாம், நன்மையிலும் இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர்உதவுங்கள்,தீமையிலும்,பகைமையிலும்பரஸ்பரம் உதவாதீர்கள் என்றும் மனித சமூகத்திற்கு இக்குர்ஆன் அழைப்பு விடுத்துள்ளது.

மனப்பாடம் செய்தல், ஓதுதல், செவிமடுத்தல், வசனங்களை சிந்தித்தல், யோசித்தல், விளங்குதல், விளக்குதல் போன்றவற்றின் மூலம் இக்குர்ஆனுடன் சிறந்த முறையில் நடந்துகொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.

அதன் காரணத்தினால் குர்ஆன் கூறும் வழியில் நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்வோம். அது இம்மையிலும் மறுமையிலும் நன்மைகளைப் பெற்றுத்தரும்.

மின்ஸார் இப்றாஹீம்...

# நாவின் விபரீதங்கள்



மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்துவதே அவனது பேசும் திறன்தான். இச்சிறப்பை அவனுக்கு பெற்றுத்தந்த நாவு ஒரு இறை அருட்கொடையாகும். இருப்பினும் அதைப் பயன்படுத்தும் வழிவகைகளைப் பொறுத்து அவன் நாவினால் சுவனமும் செல்லலாம், நரகமும் செல்லலாம்.

நாவினால் புரியப்படும் பாவங்கள் நிறையவே உள்ளன. இது குறித்து அல்குர்ஆன், "இறை நம்பிக்கையாளர்களே! நீங்கள் யாரும் யாரையும் பரிகாசம் செய்யாதீர். ஏனெனில் கேலி செய்யப்படுபவர் சிலவேளை கேலி செய்தவரை விட (அல்லாஹ்விடத்தில்) சிறந்தவராக இருக்கக்கூடும், மேலும் எந்தப் பெண்களும் பிற பெண்களை பரிகாசம் செய்யாதீர். கண்ஜாடையால் யாரையும் இழிவுப் படுத்தாதீர், யாரையும் பட்டப்பெயர் கூறி அழைக்காதீர். இறை விசுவாசத்தின் பின்னர் பாவம்புரிதல் என்பது மிகக் கொடியதாகும். யார் இவற்றிலிருந்து பாவவிமோசனம் தேடவில்லையோ அத்தகையோர் பெரும் அநியாயக்காரர்கள் ஆவார்கள். மேலும், நீங்கள் பிறரைப்பற்றி புறம் பேசாதீர்கள். உங்களின் இறந்த சகோதரனின் மாமிசத்தை புசிப்பதை உங்களில் யாராவது விரும்புவார்களா? அதை வெறுப்பீர்களல்லவா? எனவே அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள். அல்லாஹ் உங்களை ஓர் ஆண் பெண்ணிலிருந்தே படைத்தான். நீங்கள் ஒருவரோடு ஒருவர் அறிமுகமாகி பழகுவதற்காகவே பல கோத்திரங்களாக, பிரிவுகளாக ஆக்கினான். எனவே உங்களில் அதிகம் அல்லாஹ்வை அஞ்சுபவரே அல்லாஹ்விடத்தில் மிக சங்கை மிக்கவராவார்.

(ஹுஜுராத்:1113)

முஆத் (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள். 'நான் நபிகளிடத்தில் அல்லாஹ்வின் தூதரே! என்னை சுவனத்தில் நுழைவித்து நரகத்தை விட்டும் தூரமாக்கும் ஒரு செயலைக் கற்றுத்தாருங்கள் என்று கேட்டபோது, "அல்லாஹ்வை மட்டும் வணங்கு. அவனுக்கு எதையும் இணையாக்கி விடாதே! நோன்பு பிடி, அது ஓர் கேடயம், ஸக்காத் கொடு, தர்மம் செய் அது இறைகோபத்தைத் தணித்துவிடும், இரவின் மத்திய பகுதியில் நின்று வணங்குவதை வழக்கமாக்கு,... என்று கூறிவிட்டு நரகம் தவிர்த்து சுவர்க்கம் செல்ல மேற்கூறப்பட்டவற்றை செய்வதை இலகுவாக்கும் வழியை சொல்லவா? என்று கூறிய நபிகளார், தமது நாவை கையால் பிடித்து, "இதை அடக்கி வைத்துக் கொள்!" என்றார்கள். உடனே நான் அல்லாஹ்வின் தூதரே! நாம் நாவால் பேசும் பேச்சாலும் குற்றம் பிடிக்கப் படுவோமா? என்றதும் நபியவர்கள் "சரியாய் போச்சு..." முஆதே! அதிக மனிதர்கள் நரகத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு முகங்குப்பற வீசப்படுவதற்குக் காரணமே இந்த நாவினால் அவர்கள் தேடிக்கொண்டவைகள்தான்' என்றார்கள். (ஆதாரம் புஹாரி)

ஒரு மனிதன் விபரீதம் அறியாமல் தன் நாவினால் அல்லாஹ்வை கோபமூட்டும் ஒருசில வார்த்தைகளை அலட்சியமாகப் பேசிவிடுகின்றான். ஆனால் அதன் காரணமாக அவன் நரகில் 70 வருட பயண தூரத்தின் அளவுக்கு ஆழிய நரகத்தில் தூக்கி வீசப்படுகின்றான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நபிமொழி)

ஒரு சிலர் தேவையற்ற பேச்சுக்களில் அதிக நேரத்தை விரயமாக்குகின்றனர். ஆனால் அளவுக்கதிகமாக எந்நேரமும் ஏதாவது பேசிக்கொண்டே இருப்பதும் அல்லாஹ்வை வெறுப்பூட்டும் செயலாகும்.

'எனக்கு மிகவும் வெறுப்பானவரும் மறுமையில் அந்தஸ்தால் என்னைவிட்டும் வெகு தூரத்தில் இருப்பவரும் யாரெனில் வாய்புடைக்க அதிகம் பேசும், ஓய்வின்றி கதை பேசும், சுயபுகழ் பாடி கர்வமடைவோர் தான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம் அஹ்மத்).

அதனால் தேவையற்ற வீண்பேச்சைத் தவிர்ப்பது முஃமின்களின் விசேட பண்பாகும் என அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கிறது. ஏனெனில் வீண்பேச்சு பேசல் நேரத்தை விரயம் செய்யும் செயலாகும். விரயம் செய்வோரை அல்லாஹ் நேசிப்பதில்லை அவர்கள் ஷைத்தானின் சோதரர்களென அல்குர்ஆன் கண்டிக்கின்றது.

(ஸூரா இஸ்ராஃ: 126).

வீண் பேச்சுக்களானது ஒரு மனிதனை தீய, தூஷண, கீழ்த்தரமான பேச்சுக்களைப் பேசத்தூண்டும். அவற்றின் மூலம் அவன் தனது அந்தஸ்தை தானே இழந்து மக்கள் மத்தியில் மதிப்பற்றவனாக மாறிவிடுகின்றான். அதனால் தான் நபி(ஸல்) அவர்கள், 'தான் செவியுற்றவற்றையெல்லாம் பேசிவிடுவதே ஒருவன் பாவி என்பதற்குரிய போதிய அடையாளம் என்றார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்).

ஆகவே வீண் பேச்சுக்களைத் தவிர்த்துக் கொள்வது இன்றியமையாததாகும். அதேபோன்று பொய் பேசுதல், புறம் பேசுதல், கோள் சொல்லுதல், பிறரை ஏசுதல், சாபமிடுதல், திட்டுதல், பிறரை கேலி, கிண்டல் செய்தல், மனம் புண்படும் விதமாகப் பேசுதல் உள்ளிட்ட அனைத்தும் இஸ்லாம் வெறுத்து கண்டித்துள்ளவையாகும்.

மௌலவி
ஏ.ஜி.எம். ஜலீல் மதனி...
பகுதித் தலைவர், மஃஹதுஸ் ஸுன்னா அரபுக் கல்லூரி, காத்தான்குடி

## ஒவ்வொரு வர்த்தகரும்...

குறையும், அதன் மூலம் இந்த நெருக்கடிக்கு தீர்வு கிட்டும் என்றார். நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி குறித்து புத்தகங்கள் எழுத விரும்பும் எழுத்தாளர்களிடையே அரசியல் சாராத பொருளாதார உரையாடல் இருக்க வேண்டும் என்றார்.

இது 1973 இல் ஆரம்பிக்கப்பட்ட சரசவி புத்தக குழுமத்தின் 30 ஆவது கிளையையே அவர் திறந்து வைத்தார்.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் தெரிவித்ததாவது:

ஹன்வெல்ல ராஜசிங்க மத்திய கல்லூரியின் பிரபலமான பழைய மாணவர் பிரேமசிறி ஆவார். ஹன்வெல்ல ராஜசிங்க மத்திய கல்லூரியின தலைமுறையைச் சேர்ந்த சிலர் நம் நாட்டில் பல்வேறு துறைகளில் திறமைகள் மற்றும் புத்திசாலித்தனத்துடன் தேசத்திற்கு புகழ் சேர்த்துள்ளனர்.வர்த்தகத் துறையில் மிகச்சிறிய நிலையில் இருந்து தொடங்கி, பல இன்னல்களைச் சந்தித்து, பல்வேறு அவமானங்களையும், கேலிகளையும் சந்தித்து, தேசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெற்றிகரமான வர்த்தகதப் பயணத்தை மேற்கொண்ட தொழிலதிபராக அவரது பணியை நாங்கள் மதிக்கிறோம்.

இதுவரை புத்தக வெளியீட்டுத் துறையில் புத்தகங்களுக்கு வற் வரி கிடையாது. புதிதாக 18வீத வற் வரி விதிக்கப்பட்டுள்ளது என்று கூறும்போது, அதை ஊடகங்களில் விளம்பரம் செய்யும் விதம், பெரும் அழுத்தத்தை உருவாக்கும் விதத்தில் உள்ளது. வற் வரி முன்பு முந்தைய அரசாங்கத்தின் கீழ் 15வீதம் இருந்தது. ஆனால் அந்த நேரத்தில் புத்தகங்கள் இலவச பொருட்கள் பட்டியலில் இருந்தன. இன்றும் அரிசி, காய்கறிகள், பழங்கள், தேயிலை போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு வற் வரி கிடையாது. பெறுமதி சேர் வரியின் பொருள் என்னவென்றால், மதிப்பு கூட்டப்பட்டால் மட்டுமே, அது வரி பொறுப்புக்கு உட்பட்டது.



புத்தகங்களுக்கு 18 வீதம் வற் வரி வசூலிப்பு புத்தகங்களை வாங்கும் போது உள்ளீட்டு செலவைக் கழித்த பிறகு பெறப்பட்ட தொகைக்கு வற் வரி செலுத்த வேண்டும். ஆனால் பிரச்சினை என்னவென்றால், புத்தகங்களுக்கு வற் வரி விதிக்கப்படும்போது, 60 மில்லியனுக்கும் அதிகம் என்றால் மாத்திரமே வரி பொறுப்பு உள்ளது, எனவே பெரிய அளவிலான 15 புத்தக வெளியீட்டாளர்கள் வற் வரிக்கு உட்பட்டுள்ளனர். பெரும்பாலான புத்தகக் கடை உரிமையாளர்கள் வற் வரி இல் இருந்து விலக்கு பெற்றுள்ளனர். இந்த நிலைமையை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு விளக்கியுள்ளோம். நாம் அனைவரும், ஒவ்வொரு தொழிலதிபரும் ஒரு சிறிய அல்லது பெறுமதி சேர் வரியை செலுத்தினால் மட்டுமே வற் வரியின் சுமையை குறைக்க முடியும். அனைத்து வரிகளும் செலுத்தப்பட்டால், அவர்கள் செலுத்தும் வரிகளின் சதவீதம் குறையும்.

அப்போதுதான் இந்த நெருக்கடி தீரும். எமது நாட்டின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின்படி, 2022ஆம் ஆண்டு நேரடி மற்றும் மறைமுக வரிகள் மூலம் இலங்கை அரசாங்கத்தினால் திரட்டப்பட்ட மொத்த வருமானம் 1751 மில்லியன். அதில் 1965 மில்லியன் அதாவது 72வீதம் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலவிடப்பட்டுள்ளது.

## சர்வதேச மாநாடுகளில்...

உகண்டாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை ஆரம்பித்துள்ளார். அணிசேரா நாடுகளின் மாநாட்டின் (NonAligned Movement ) 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு, "உலளாவிய கூட்டு செழுமைக்கான ஒத்துழைப்புகளை விரிவுபடுத்தல்" என்ற தலைப்பில் ஜனவரி 19 மற்றும் 20ஆம் திகதிகளில் உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெறவுள்ளது. அதனையடுத்து, G77 மற்றும் சீனாவின் 03 ஆவது தென் மாநாடு ஜனவரி 21, 22ஆம் திகதிகளில் "எவரையும் கைவிடக்கூடாது" என்ற தலைப்பில் கம்பாலா நகரில் நடைபெறவுள்ளது. மேற்படி இரு மாநாடுகளிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளதோடு, ஆபிரிக்க வலயத்தில் காணப்படும் உலக தெற்கு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளையும் அவர் சந்திக்கவுள்ளார். அணிசேரா நாடுகளின் அமைப்பில்(NonAligned Movement) 120 நாடுகள் அங்கம் வகிப்பதோடு, பெண்டூன்க் கொள்கையை மையப்படுத்தி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் செயற்பட்டு வருகிறது.

இலங்கை அணிசேரா நாடுகள் அமைப்பின் ஆரம்ப உறுப்பினர் என்பதோடு, 1976 1979 அதன் தலைமைத்துவத்தையும் வகித்துள்ளது. 1976ஆம் ஆண்டில் 05ஆவது அரச தலைவர்கள் மாநாட்டை இலங்கை நடத்தியது.

G77 மற்றும் சீனாவின் 03ஆவது தெற்கு மாநாட்டில் 134 நாடுகள் அங்கம் வகிப்பதோடு, வர்த்தகம், முதலீடு, நிலையான அபிவிருத்தி, காலநிலை அனர்த்தம், வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்புகளை பலப்படுத்தும் நோக்கில் நடத்தப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மிகப் பெரிய கூட்டிணைவு என்ற வகையில், உலகளாவிய தெற்கு நாடுகள் தங்களது கூட்டு பொருளாதார தேவைகளை அறிவித்தல், மேம்படுத்தல் மற்றும் உலகளாவிய தெற்கு நாடுகளின் பேச்சுவார்த்தை என்பவற்றுக்கு இந்த மாநாடு களம் அமைக்கும்.

G77 மற்றும் சீன மாநாட்டின் தலைமைத்துவத்தை இதுவரையில் கியூபாவும், அணிசேரா நாடுகள் அமைப்பின் தலைமைத்துவத்தை அசர்பைஜான் குடியரசும் வகித்து வந்தன. இம்முறை மேற்படி இரு மாநாடுகளுக்கும் உகண்டா குடியரசு தலைமை தாங்க உள்ளமை குறிப்பிடதக்கதாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் உகண்டா விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, காலநிலை அனர்த்தம் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர்.

## புதிதாக மூன்று இலட்சம்...

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். 07 இலட்சம் அஸ்வெசுவ மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலித்ததையடுத்து மேலும் 03 இலட்சம் குடும்பங்கள் அதற்கு தகுதி பெற்றுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். அந்த வகையில் தகைமை பெறாத குடும்பங்களின் எண்ணிக்கை ஐந்தாயிரமாகும் என்றும் நிதி பொருளாதார மேம்பாடு மற்றும் தேசிய கொள்கைக்கான அமைச்சு தெரிவித்துள்ளது. அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர், அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வேலைத்திட்டம் தொடர்பில் முன்வைக்கப்பட்டிருந்த 6,40,000 மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதன் பின்னர், 3,00,000 குடும்பங்கள் புதிதாக அதில் இணைத்துக்கொள்வதற்கு தகைமை பெற்றுள்ளன. அந்த வகையில், அஸ்வெசும கொடுப்பனவை பெற்றுக் கொள்ளும் குடும்பங்கள் 17,00,000 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அடுத்த தவணைப் பணத்தை வழங்குவதற்கு முன்னதாக புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ஜுலை மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான தவணையை வங்கிகளில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனை காரணமாக இதுவரை அஸ்வெசும கொடுப்பனவைப் பெற்றுவந்த 5,209 குடும்பங்கள் அதற்குத் தகைமையற்றவர்களாக காணப்படுவதாகவும் மேலும் 2,567 குடும்பங்கள் தாம் பெற்றுக்கொண்டுள்ள தொகையின் கீழ் மட்டத்திற்குச் சென்றுள்ளன. அத்துடன் அவ்வாறு கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொண்டு வரும் 50,882 குடும்பங்களுக்கான கொடுப்பனவு மட்டம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 11,00,000 மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகள் கிடைத்துள்ள நிலையில் மிக விரைவில் அதனைப் பரிசீலிக்கும் நடவடிக்கைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார். நிதியமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட பேச்சுவார்த்தையொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

## யுக்திய விசேட சுற்றிவளைப்புகளால்...

திணைக்களங்களின் வகிபாகம் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து மக்களுக்கு துல்லியமான புரிதலை வழங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் மாநாடு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் பத்தரமுல்ல சுஹுருபாவிலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று (18) நடைபெற்றது.

அமைச்சர் டிரான்அலஸ் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

"எமது அமைச்சின் கீழுள்ள துறைகளில் முன்னேற்றம் காணப்படுகின்றது. இரண்டு விஷயங்களைச் சொல்ல வேண்டும்.

கடவுச்சீட்டு பெறக்கூடிய 51 இடங்கள் இதுவரை நாடளாவிய ரீதியில் திறக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆறு மாதங்களில் இடங்களின் எண்ணிக்கையை 335 ஆக உயர்த்துவதே எங்கள் நோக்கம். தற்போது பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்படும் அடையாள அட்டை வழங்கும் செயற்பாடுகளை போன்று கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்ளும் திறனையும் விரிவுபடுத்த எதிர்பார்க்கின்றோம்.

ஆபரேஷன் யுக்திய வெறும் ஊடக நிகழ்ச்சியா? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், இதுவரை எந்த ஒரு பெரிய, அங்கீகரிக்கப்பட்ட ஊடகமும் இத்தகைய குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை. ஆனால் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலக பணத்தை நம்பியிருக்கும் ஒரு சிலரே இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இந்நடவடிக்கைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், இந்த நடவடிக்கை ஆரம்பிக்கும் வரையில் எனக்கு இது பற்றிய முழுமையான புரிதல் இருக்கவில்லை. ஆனால் கிராமம், நகரம் என்ற பேதமின்றி நாடளாவிய ரீதியில் உள்ள சாதாரண மக்களிடமிருந்து எனக்கு வந்த தொலைபேசி அழைப்புகள் மூலம் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

பாதாள உலகத்தினாலும் போதைப் பொருள்கடத்தலினாலும் மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகியுள்ளனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் தனிப்பட்ட பிரச்சினைகளில் சுற்றிவளைப்புகளை நடத்துவதில்லை.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைப் பற்றி நாங்கள் கவலைப்படுவதில்லை. இந்த நடவடிக்கை மூலம் பாகுபாடின்றி கடத்தலில் ஈடுபடும் பெரிய மனிதர்களை கைது செய்வதே எங்கள் நோக்கம்.

எவ்வளவுதான் பொய்ப் பிரசாரம் செய்தாலும் அதைக் கருத்தில் கொள்வதில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்களும் சட்டத்தரணிகளும் வெகு சிலரே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான 90% விசாரணைகள் தற்போது நிறைவடைந்துள்ளதாக நான் தெரிவித்தேன். அதன் பிறகு, ஒரு செய்தியாளர் சந்திப்பில், பேராயர் உட்பட சில விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. நான் இந்த அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொண்டதிலிருந்து இதுவரை பொலிஸாரின் 90 வீதமான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக நான் பிரகடனப்படுத்துகின்றேன். ஆனால் விசாரணையில் நாம் காணாத விஷயங்கள் இருக்கலாம். அவருக்கும் மற்றவர்களுக்கும் அத்தகைய தகவல்கள் இருக்கலாம். எனவே, பேராயர் மற்றும் கத்தோலிக்க திருச்சபை எங்களுடன் மேற்கொள்ளப்படும் விசாரணைகளை அவதானித்து அதில் ஈடுபடுமாறும், அதன் பின்னர் அதில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் கலந்துரையாடி மேலதிகத் தகவல்கள் தெரிந்தால் ஒன்றிணைந்து ஆராய்ந்து தீர்வு காண உதவுமாறும் அழைப்பு விடுத்தேன். என்றார்.

## பொதுமக்களின் கருத்துகளை...

ஒப்படைத்துள்ளதாகவும் ஆணைக்குழுவின் நிதியின் கீழ் மின்கட்டணத்தை திருத்துவது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அந்த ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கமானது மின்கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதுடன் அதற்கிணங்க மின்கட்டணத்தை குறைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நீர் மின் உற்பத்தி படிப்படியாக அதிகரித்து வரும் நிலையில் மின்சார சபை இலாபமீட்டி வரும் நிலையில் அதன் மூலம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கடந்த வருட ஒக்டோபர் மாதத்தில் நூற்றுக்கு 18 வீதமாக அதிகரிக்கப்பட்ட மின் கட்டணத்தை மேற்படி திருத்தத்தின் மூலம் நூற்றுக்கு நூறு வீதமாக மீண்டும் குறைப்பதற்கு அது தொடர்பான மேற்பார்வைக்குழு யோசனைகளை முன்வைத்துள்ளது.

நாட்டில் அதிகளவு மழை வீழ்ச்சி இடம்பெற்றதால் மின்சார சபை அதிகளவு இலாபத்தை பெற்றுக்கொண்டுள்ள நிலையில் அதன் பிரதிப் பலன்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று அந்த மேற்பார்வைக் குழு தெரிவித்துள்ளது.

## களனி கங்கையில்...

மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கடுவெல, வெலிவிட்ட சென். அந்தனீஸ் மாவத்தையை வசிப்பிடமாக கொண்ட திஸ்ன பிரபோத் பெரேரா என்ற சிறுவனே கடந்த 16ஆம் திகதி பிற்பகல் இவ்வாறு முதலைக்கு இரையாகியிருந்தார். அவர் கடுவெல வெலிவிட்ட புனித மரியாள் கல்லூரியில் ஐந்தாம் ஆண்டில் கல்வி கற்று வந்தவராவார்.

கடந்த 16ஆம் திகதி பிற்பகல் மேற்படி சிறுவன் தனது பாட்டி மற்றும் இளைய சகோதரருடன் வெலிவிட்ட சென். அந்தனீஸ் மாவத்தையிலுள்ள களனி கங்கையில் குளிக்கும் இடத்திற்கு சென்றுள்ளார். அதன்போது அவரது பாட்டி ஆடைகளை சலவை செய்து கொண்டிருந்த சமயம், அவரும் அவரது இளைய சகோதரரும் குளிப்பதற்காக நீரில் இறங்கியுள்ளனர். அதன்போது திடீரென அங்கு வந்த முதலையொன்று திஸ்ன பிரபோத் என்ற 9 வயது சிறுவனை இழுத்துச் சென்றுள்ளது.

அதன்போது, அங்கிருந்தோர் கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதும் அவரை காப்பாற்ற முடியவில்லை. அந்த முதலை சுமார் 18 அடி நீளம் கொண்டது என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

## கொழும்பில் சிசிடிவி மூலம்...

கண்டறிந்து தவறுகளுக்கான அபராத பற்றுச்சீட்டு வாகன உரிமையாளருக்கு மிக அருகில் காணப்படும் பொலிஸ் நிலையத்தினூடாக அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை சுஹுறுபாயவிலுள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி செய்தியாளர் சந்திப்பில் அது தொடர்பில் மேலும் தெரிவித்த பதில் பொலிஸ் மாஅதிபர்.

## 'யுக்திய' விசேட சுற்றிவளைப்புகள்...

நிறைவடையும் நிலையில் போதைப்பொருள் தொடர்பான சந்தேக நபர்கள் 38,225 பேரையும் பாதுகாப்பு பிரிவினரிடம் வழங்கப்பட்டுள்ள பட்டியலிலுள்ள சந்தேக நபர்கள் 2365 பேரையும் கைது செய்துள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு போதைப்பொருள் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள 38 ஆயிரத்து 225 பேர்களில் 1,703 சந்தேக நபர்களை தடுத்து வைத்து விசாரணை செய்யும் உத்தரவை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் போதைப்பொருளுக்கு அடிமையாகியுள்ள 1867 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

## புதிய முதலீடுகள் குறித்து...

விளிம்பிலிருந்து பின்வாங்குதல் (Pulling back from the brink) என்ற தலைப்பில் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஜனாதிபதி, இலங்கையின் பொருளாதார சவால்கள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கினார்.

இலங்கையின் எதிர்கால நோக்கு மற்றும் கடனை திருப்பிச் செலுத்துவதற்கான அணுகுமுறை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, இலங்கை இதுவரை அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தை கோடிட்டுக் காட்டியதுடன், இந்த ஆண்டு 2% பொருளாதார வளர்ச்சியை இலங்கை எதிர்பார்ப்பதாகவும், அடுத்த வருடம் அதனை 5% ஆக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) திட்டத்தின் படி, அரசாங்க வருவாயை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், வருவாய் சேகரிப்பு உத்திகளில் சீர்திருத்தம் மற்றும் வருவாய் ஆணைக்குழு உள்ளிட்ட நிறுவன ரீதியான கட்டமைப்பை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் குறித்து அவர் விளக்கினார்.

## ஆண்டின் முதல் 15 நாட்களில்...

இந்நிலையில் கொழும்பு மாவட்டத்தின் பொரளை உள்ளிட்ட இடங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்தது. இதற்கிடையில், டெங்கு நோய்க்குள்ளாகி 23 வயதுடைய பல்கலைக் கழக மாணவி ஒருவர் இந்த வாரத்தில் உயிரிழந்தார். கடந்த 2023ஆம் ஆண்டில் 86,232 டெங்கு நோயாளர்கள் பதிவாகியமையை தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு சுட்டிக்காட்டியது.

## இன்றைய பலன்கள்

( 19. 01. 2024 )

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா

(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** பூர்வீக சொத்து பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். தூர தேசத்தில் இருந்து வரும் தகவல் ஆதாயம் தருவதாக அமையும்.

**ரிஷபம்:** வீட்டுக்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். திருமண வயது அடைந்த பிள்ளைகள் இருந்தால் அவர்களுக்கு சீர்வரிசை பொருட்கள் வாங்குவீர்கள்.

**மிதுனம்:** திருமண வயதை அடைந்த பிள்ளைகளுக்கு நீங்கள் செய்த கல்யாணம் முயற்சி இப்பொழுது கைகூடும். திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள்.

**கடகம்:** உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். ஒரு சிலருக்கு வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் பணிபுரிய எடுத்த முயற்சி கைகூடும்.

**சிம்மம்:** எதையும் திட்டமிட்டு செய்து வெற்றி காண்பீர்கள். தொழில் ரீதியாக வந்த இடையூறுகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும்.

**கன்னி:** உற்சாகம் கொஞ்சம் குறையலாம். கொடுக்கல் வாங்கல்களில் ஒரு தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை உங்கள் கரங்களில் புரளும்.

**துலாம்:** சகோதரர்கள் வழியில் நல்ல காரியங்கள் நிகழலாம். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பொருளாதாரம் திருப்தி தரும்.

**விருச்சிகம்:** உயர் அதிகாரிகள் உங்களுக்கு கூடுதல் பொறுப்புகளை வழங்கி சம்பள உயர்வு தர காத்திருப்பர்.

**தனுசு:** உத்தியோக முன்னேற்றம் உண்டு. பெற்றோர் வழியில் இருந்த பிரச்சனை அகலும் தொழில் லாபம் திருப்திகரமாக இருக்கும்.

**மகரம்:** இழப்புகளை ஈடு செய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும்.

**கும்பம்:** வெற்றி ஒன்றே என்ற குறிக்கோளோடு செயற்படுவீர்கள். நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும்.

**மீனம்:** தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்படும்.

## கிரிப்டோ நாணய முதலீடு;...

களின் தந்திரோபாயங்களில் சிக்கி பணத்தை வீணாக இழக்காமல், அவதானமாக இருக்குமாறும் பொதுமக்களுக்கு மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது.

கிரிப்டோ நாணய முதலீடு தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் இலங்கை மத்திய வங்கிய வெளியிட்ட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்தது.

## Biometric தரவுகள்...

கைரேகைகள் மற்றும் முக அடையாளங்கள் தொடர்பான தரவு சேகரிப்பு ஆரம்பிக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம், நீண்டகாலமாக நடைமுறைப்படுத்த முடியாமலிருந்த இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்பாடு இந்த வருடத்தில் நிச்சயமாக ஆரம்பிக்கப்படும்.

பெப்ரவரி மாதம் குருநாகல் மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் ஆட்களை பதிவு செய்வதற்கான இரண்டு மாகாண அலுவலகங்கள் நிறுவப்பட்டு, அதில் ஒரு நாள் சேவைகள் வழங்கப்படுமென்றார்.

தற்போது ஆட்பதிவு அலுவலகத்துக்குச் சொந்தமான தரவு கட்டமைப்பிலிருந்து சுமார் 90 நிறுவனங்கள் சேவைகளை பெற்று வருகின்றன. மேலும் இதனை விரிவுபடுத்துவதன் மூலம் மார்ச் மாதத்திலிருந்து மேலும் பல நிறுவனங்களுக்கு சேவைகள் வழங்கப்படவுள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்திரி தெரிவித்தார்.

## சுய பொருளாதாரத்தை...

ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பு இருப்பதற்கு ஏதுவான நிலைமை உருவாகுமெனவும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முற்பகல் சுயதொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது

இக்கலந்துரையாடலில் சுயதொழில் முயற்சியாளர்கள் தாம் எதிர்நோக்கியுள்ள தொழில்சார் நடைமுறை பிரச்சினைகளையும், வங்கிகள் ஊடாக கடன் வசதிகளை பெற முற்படும் போது ஏற்படும் இறுக்கமான நடைமுறைகளால் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்தும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர். இச்சுயதொழில் முயற்சியாளர்களின் கருத்துகளில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை எதிர்பார்க்கின்ற சுயதொழில் முயற்சியாளர்கள் அதற்கான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான ஒத்துழைப்பினையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும் என தெரிவித்திருந்தார்.

## தணிக்கை சபை இரத்து...

தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவில் திரைப்படவியலாளர் அசோக ஹந்தகம, நாடகக் கலைஞர் ராஜித திஸாநாயக்க, படைப்பாளர் அனோமா ராஜகருணா மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜகத் விக்கிரமநாயக்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். திரைப்படம், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருடன் கலந்தாலோசித்து, புதிய சர்வதேச போக்குகள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப இந்த வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள 1912ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பொது அரங்கேற்றக்கலை கட்டளைச் சட்டத்தை ஆராய்ந்து இந்த புதிய சட்டத்தை செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது எனவும் குழுவின் தலைவர் சமன் அதாவுதஹெட்டி தெரிவித்தார்.

## நீர் கட்டணம் செலுத்தாத...

தெரிவித்துள்ளார். அவர்களில் வீட்டு நீர்ப் பாவனையாளர்கள் 63,150 பேரும் வீடுகளல்லாத நிறுவனங்களின் பாவனையாளர்கள் 17,820 பேரும் உள்ளடங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் இவ்வாறு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ள நீர்ப் பாவனையாளர்களிடமிருந்து 1909 மில்லியன் ரூபாவை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறவிட வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, நீர் கட்டணத்தை செலுத்தாத காரணத்தினால் 6118 மில்லியன் ரூபா மேற்படி சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது. அவற்றில் ஆஸ்பத்திரிகள் மூலம் 182 மில்லியன் ரூபா, பாடசாலைகள் மூலம் 175 மில்லியன் ரூபா, இராணுவம் மற்றும் பொலிஸாரிடமிருந்து 116 மில்லியன் ரூபா நிலுவையாக காணப்பட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் அயலகத் தமிழர் மாநாடு



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் மாநாட்டில் வைத்து முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் எழுதிய 'இலங்கையில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் 200" நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. தமிழக அமைச்சர்களான மா. சுப்பிரமணியம், செஞ்சி மஸ்தான், மனோ கணேசன் (எம்.பி) உள்ளிட்டோரையும் படத்தில் காணலாம். உலகளாவிய ரீதியில் வாழும் சர்வதேசத் தமிழ் எழுத்தாளர்களில் தேர்வு செய்யப்பட்ட பலரும் மேடையில் கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

# சீனன்கோட்டை மத்ரஸதுல் ஸலாஹில் 2023ஆம் வருட இல்ல விளையாட்டு





பேருவளை சீனன்கோட்டை மத்ரஸதுல் ஸலாஹ் அரபுக்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் கல்லூரி வளாகத்தில் மூன்று தினங்களாக வெகுவிமர்சையாக நடைபெற்றன. இந்நிகழ்வில் கல்லூரி மாணவர்கள் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பல போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இவ்வருட கற்கை நெறிக்காக உள்வாங்கப்பட்டுள்ள புதிய மாணவர்களும் இப்போட்டிகளில் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும். இறுதிநாள் நிகழ்வான நேற்று (18) நிகழ்வில் அதிதிகளாக மத்ரஸா நிர்வாக சபை உறுப்பினர்களான ஹிகாம் ஹாஜி, நௌபர் ஹாஜி உட்பட நிர்வாக சபை உறுப்பினர்கள், அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை அதிபர் எம். இப்றாஹீம் மற்றும் ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன. இப்போட்டிகளினூடாக மாணவர்களின் திறமையை வெளிக்காட்டுவதும் மாணவர்களிடையே ஒற்றுமையையும் சகோதரத்துவப்பண்பையும் உருவாக்குவதே இதன் பிரதான நோக்கமென போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# வெலிகமவில் இலவச மருத்துவ முகாம்







**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம முஹியித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாகம் மற்றும் புதிய தெரு வாலிபர் சங்கம் ஆகியன இணைந்து (15) ஏற்பாடு செய்திருந்த மாபெரும் இலவச மருத்துவ முகாம் வெலிகம முஹியித்தீன் பள்ளிவாசல் முற்ற வெளியில் இடம் பெற்றது.

இதில் 15க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் கலந்து கொண்டு சிகிச்சையளித்தனர். இவர்கள் அனைவரும் வெலிகம மண்ணைச் சேர்ந்தவர்கள். சுமார் 1000க்கும் மேற்பட்ட நோயாளிகள் இதில் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். காலை 9.00 மணி முதல் மாலை வரை இது இடம் பெற்றது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மக்கள் முகம் கொடுத்து வரும் இச்சந்தர்ப்பத்தில் இவ்வாறான நிகழ்வுகள் பாராட்டத்தக்கது என புத்திஜீவிகள் மற்றும் பலரும் குறிப்பிடுகின்றனர்.

# கச்சக்கொட்டித்தீவு – மாகமாறு வீதி காபட் இடும் பணி நேற்று ஆரம்பம்



திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா கச்சக்கொட்டித்தீவு மாகமாறு வீதியை காபட் இட்டு அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் நேற்று (18) வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இதனை ஆரம்பித்து வைத்தார்.

இவ்வீதியில் பயணம் செய்யும் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்த நிலையில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையிட்டு மக்கள் மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

(ஏ.எம்.ஆஷிப்)

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 130,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 ஜனவரி 23ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124D266 | LKA18224G266 | LKA36425A245 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 70,000 | 30,000 | 130,000 |

| | | |
|---|---|---|
| ஏலவிற்பனைத் திகதி | : | 2024 ஜனவரி 23 |
| தீர்ப்பனவுத் திகதி | : | 2024 ஜனவரி 26 |
| வழங்கப்படும் திகதி | : | 2024 ஜனவரி 26 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : | 2024 ஜனவரி 23 செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்த பட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**





வங்கியொன்றின் அல்லது நிதியியல் நிறுவனமொன்றின் வாடிக்கையாளரா?

அவ்வாறாயின்

வியாபார உறவுமுறைகளை நிறுவுகின்ற பொழுது அல்லது உங்கள் தகவல்களைக் காலாந்தர அடிப்படையில் இற்றைப்படுத்தும் பொழுது உங்கள் வங்கியினால் அல்லது நிதியியல் நிறுவனத்தினால் கேட்டுக் கொள்ளப்படுகின்ற கீழுள்ள தகவல்களைத் தயவுசெய்து வழங்கவும்:

- முழுப் பெயர்
- உங்கள் புகைப்படத்தினைத் தாங்கிய அலுவலர் தனிப்பட்ட அடையாளம் அல்லது வேறு ஏதேனும் அடையாள ஆவணங்கள் (உ-ம்: தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமப்பத்திரம்)
- நிரந்தர முகவரி மற்றும் முகவரியைச் சரிபார்ப்பதற்கான ஆவணங்கள்
- தொலைபேசி இலக்கம்
- பிறந்த திகதி மற்றும் தேசியம்
- புரியும் தொழிலுடன் தொடர்பான விபரங்கள்
- கணக்கினைத் திறக்கின்றமையின் நோக்கம்
- எதிர்பார்க்கப்படும் மாதாந்த மொத்தப் புரள்வு/ வியாபாரத்தின் அளவு
- எதிர்பார்க்கப்படும் கொடுக்கல்வாங்கல் மாதிரி
- வருமானங்களின் மூலம்

உங்கள் வங்கிக்கு அல்லது நிதியியல் நிறுவனத்திற்கு நீங்கள் வழங்கிய மேற்குறிப்பிட்ட தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் போது மேற்குறிப்பிட்ட தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்வது உங்களின் பொறுப்பாகும்.

வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் அவர்கள் வழங்குகின்ற பணிகளின் தரத்தினை உயர்த்துவதற்காக உங்களின் தகவல்களைச் சேகரிக்கும் போது நிதியியல் குற்றங்களின் இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நாட்டின் சட்டபூர்வத் தேவைப்பாடுகளைப் பின்பற்றவும்.

உங்கள் வங்கியுடன் அல்லது நிதியியல் நிறுவனத்துடன் ஆதரவளிக்கின்றதொரு விதத்தில் தீவிரமான முறையில் நீங்கள் ஒத்துழைக்கவில்லையாயின் அவர்கள் ஏதேனும் வியாபார உறவுமுறைகளை உங்களுடன் மேற்கொள்ளாமல் விடலாம் அல்லது ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை உங்களுடன் மேற்கொள்ளாமல் விடலாம் அல்லது உங்களுடன் இருந்த வியாபார உறவுமுறைகளை முடிவுறுத்தி விடலாம்.

உங்கள் வங்கியினால் அல்லது நிதியியல் நிறுவனத்தினால் கேட்டுக் கொள்ளப்படுகின்ற தகவல்களை வழங்குவதும் சாத்தியமான நிதியியல் குற்றங்களிலிருந்து நன்கு பாதுகாக்கப்பட்ட சமூகமானதும் வினைத்திறன் மிக்கதுமான நிதியியல் பணிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு ஒத்துழைப்புக்களை நல்குவதும் உங்களின் பொறுப்பாகும்.

எனவே, இது தொடர்பில் தங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மனப்பூர்வமாக வேண்டப்படுகிறது.

கூடுதலான தகவல்களுக்காக, நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட 2016 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட இல.1951/13 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன) விதிகளைப் பார்வையிடுவதற்கு கியூஆர் குறியீட்டினை ஸ்கான் செய்யவும்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

பணிப்பாளர், இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
☎ 0112477125 0112477692 fiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk




- உண்மைச் சொத்து முகவர்கள்
- இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்கள்
- காசினோக்கள்
- சட்டவாளர்கள்
- நொத்தாரிசுகள்
- நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது கம்பனிப் பணிகள் வழங்குவோர், அல்லது
- கணக்காளர்கள்

ஆகியோருடன் கொடுக்கல்வாங்கல்களை நடத்துகின்றவரா?

அவ்வாறாயின்

மேற்குறிப்பிட்ட நிதியல்லா வியாபாரங்கள் உங்களுடன் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் போது அல்லது உங்கள் தகவல்களைக் காலாந்தர அடிப்படையில் இற்றைப்படுத்தும் பொழுது கீழுள்ள தகவல்களைத் தயவுசெய்து வழங்கவும்:

- முழுப் பெயர்
- நிரந்தர வதிவிட மற்றும் அஞ்சல் முகவரி
- தொழில், தொழில்தருநரின் பெயர், வியாபாரம் அல்லது பிரதான நடவடிக்கை
- உங்கள் புகைப்படத்தினைத் தாங்கிய அதாவது வாடிக்கையாளர் அல்லது பயன்பெறும் சொந்தக்காரரின் அலுவலர் தனிப்பட்ட அடையாளம் அல்லது வேறு ஏதேனும் அடையாள ஆவணங்கள் (உ-ம்: தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமப்பத்திரம்)
- பிறந்த திகதி
- தேசியம்
- நிதிகளின் மூலம்
- கொடுக்கல்வாங்கல்களின் நோக்கம்
- தொலைபேசி இலக்கங்கள் (வதிவிடம், அலுவலகம் அல்லது செல்லிடத் தொலைபேசி)

தாங்கள் வழங்கிய தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் போது மேற்குறிப்பிட்ட தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்வது தங்களின் பொறுப்பாகும்.

நிதியல்லா வியாபாரங்கள் அவர்கள் வழங்குகின்ற பணிகளின் தரத்தினை உயர்த்துவதற்காக உங்கள் தகவல்களைச் சேகரிக்கும் போது நிதியியல் குற்றங்களின் இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நாட்டின் சட்டபூர்வ தேவைப்பாடுகளைப் பின்பற்றவும்.

நிதியல்லா வியாபாரங்களினால் கேட்டுக் கொள்ளப்படுகின்ற தகவல்களை வழங்குவதும் சாத்தியமான நிதியியல் குற்றங்களிலிருந்து நன்கு பாதுகாக்கப்பட்ட சமூகமானதும் வினைத்திறன் மிக்கதுமான நிதியியல் பணிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு ஒத்துழைப்புக்களை நல்குவதும் உங்களின் பொறுப்பாகும்.

எனவே, இது தொடர்பில் தங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மனப்பூர்வமாக வேண்டப்படுகிறது.

கூடுதலான தகவல்களுக்காக, நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட 2018 சனவரி 10ஆம் திகதியிடப்பட்ட இல.2053/20 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2018ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க குறித்துரைக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் (வாடிக்கையாளர் உரிய விழிப்புக் கவன) விதிகளைப் பார்வையிடுவதற்கு கியூஆர் குறியீட்டினை ஸ்கான் செய்யவும்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT

பணிப்பாளர், இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
☎ 0112477125 0112477692 fiu@cbsl.lk www.fiusrilanka.gov.lk

# கிழக்கின் குரல்



## பொத்துவிலில் மீண்டும் டெங்குநுளம்பு பெருகும் அபாயம்

### வெற்றுக் காணிகளை துப்புரவு செய்யுமாறு அறிவித்தல்

(ஒலுவில் விசேட நிருபர்)



பொத்துவில் பிரதேசத்தில் மீண்டும் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் டெங்கு நுளம்பு பெருகக் கூடிய வெற்றுக் காணிகளை வைத்திருப்போர் ஒருவார காலத்திற்குள் காணிகளை துப்புரவு செய்யுமாறு, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கமைய கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் திருமதி சக்கீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கொழிப்பு செயலணி மற்றும் பொலிஸார் ஆகியோர் வீடு வீடாகச் சென்று டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல், டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை துப்புரவு செய்தல் போன்ற வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினர் வீடுகளுக்கு வரும் போது உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

சுற்றுப்புறத்தில் தேங்கும் நீர்நிலைகளைக் கண்டறிந்து அவற்றை வெறுமைப்படுத்துதல் அல்லது நீர் தேங்கியுள்ள அத்தகைய இடங்களில் பூச்சிகொல்லி மருந்துகளைத் தெளித்தல், உயிரியற் கட்டுப்பாட்டுக் காரணிகளை இடல் போன்றன நுளம்புகளின் பெருக்கத்தைத் தடுக்கின்றன.

தென்னம் குறும்பை, யோகட் கப், வெற்றுப் போத்தல்கள், டயர்கள், பொலித்தீன் கழிவுகள் போன்றவற்றை முறையாக அகற்ற வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருப்பவர்கள் துப்புரவு செய்யுமாறும் அதனை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பருவ மழை பெய்ய ஆரம்பித்துள்ளதால் பொதுமக்கள் ஒன்று கூடும் இடங்கள், பாடசாலைகள், மதஸ்தலங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் சிரமதான பணிகளை முன்னெடுக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக துண்டுப்பிரசுரம் மூலமும், ஒலிபெருக்கி ஊடாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



அட்டாளைச்சேனை பயிற்சி கலாசாலையில் பயிற்சி பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் (13) அதன் முதல்வர் அன்வர் சதாத் தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. படம் : திராய்க்கேணி தினகரன் நிருபர்

## தென்கிழக்கு பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(ஒலுவில் விசேட நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் சங்கம் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து ஒரு நாள் அடையாள பணிப்பகிஷ்கரிப்பிலும், கவனயீர்ப்பு போராட்டத்திலும் நேற்று (18) பல்கலைக்கழக ஒலுவில் வளாக பிரதான நுழைவாயிலுக்கு முன்னால் ஈடுபட்டனர்.

வாழ்க்கை சுமையை குறை, தீர்த்துவை தீர்த்துவை சம்பள முரண்பாடுகளை தீர்த்துவை, அடிக்காதே அடிக்காதே அரச ஊழியர்களின் வயிற்றில் அடிக்காதே, மக்கள் வரிப்பணங்களை கொள்ளை அடிப்பவர்களை தடுத்திடு, இழக்கச் செய்த ஊழியர்களின் சம்பளத்தை உடனடியாக பெற்றுக்கொடு, அரசே எங்களது பிரச்சினைக்கு விரைவாக தீர்வு வழங்கு, அரச ஊழியர்களின் கௌரவத்தை பாதுகார், ஏமாற்றாதே ஏமாற்றாதே பொய்களை சொல்லி ஏமாற்றாதே போன்ற சுலோபங்களை ஏந்திய வண்ணம் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## கர்ப்பிணித்தாய்மார் 150 பேருக்கு இராணுவத்தினரால் மதிய உணவு



(கிண்ணியா மத்திய நிருபர்)

கந்தளாய் மருத்துவமனையில் 150 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இராணுவத்தினரால் நேற்றுமுன்தினம் (17) மதிய உணவு வழங்கி வைக்கப்பட்டது.

கந்தளாய் சீனிபுர ஐந்தாவது படையணியின் 44 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வைத்தியசாலையில் கர்ப்பிணி சிகிச்சைப் பிரிவில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் மதிய உணவை பெற்றுக் கொண்டனர்.

5ஆவது இராணுவத் தளபதி லெப்டினன்ட் கேணல் பிரியந்த வெகடபொல தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தாய் சேய் நல மருத்துவர் ஏ.எச்.சமீம் மற்றும் கந்தளாய் வைத்தியசாலை வைத்தியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பில்

## 10000 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கக்கூடிய தொழிற்சாலை விரைவில் உருவாக்கப்படும்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் 10000 பேருக்கு தொழில் வழங்குவதற்கு ஏற்ற தொழிற்சாலையொன்றை உருவாக்கும் நடவடிக்கைகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு எருவில் கிழக்கு பகுதியில் அமைக்கப்படவுள்ள வீதி அபிவிருத்தி பணிகளை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் முன்னெடுத்துள்ள காத்திரமான நடவடிக்கைகளால் பொருளாதாரம் படிப்படியாக மீள் எழுச்சி கண்டு வருகின்றது. இவ்வாறான இக்கட்டான சூழலில், நிதியை அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்துவதென்பது சாதாரண விடயமல்ல. ஆனாலும் பலர் விமர்சனங்களை முன்வைக்கலாம். ஆக்கபூர்வமான விமர்சனங்களை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயார். மட்டக்களப்பு மாவட்டத்தில் 36000 விதவைத் தாய்மார்கள் உள்ளனர். 8000 மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். 25000 பேர் மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கின்றனர், 8000 பெண்கள் மத்தியகிழக்கு நாடுகளில் வசிக்கின்றனர், இவ்வாறான சூழ்நிலையில் மாவட்டத்தில் எந்த தொழிற்சாலையையும் உருவாக்கவில்லை.



நாம் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே 10000 பேர் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலையை உருவாக்கும் நோக்குடன் தற்போது வேலைகளை ஆரம்பித்துள்ளோம்.

நாம் உரிமைக்காகவும், அபிவிருத்திக்காகவும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். நாம் வேடிக்கை பார்ப்பதற்கு வரவில்லை. எனவே எமக்கு உரிமையும் தேவை, அபிவிருத்தியும் தேவை என்பதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். மக்களுக்கு கௌரவமான வாழ்க்கையை நாம் உருவாக்க வேண்டும்.

பிச்சைக்காரர்களின் புண் போல ஒரே பிரச்சினையை வைத்துக் கொண்டு கதைத்துக் கொண்டிருக்க முடியாது. சிலர் தமிழர்களின் பிரச்சினையைக் காட்டி வாக்கு எடுக்கின்றார்கள். இறுதியில் ஒன்றும் நடைபெறப்போவதில்லை. எம்மைப் பொறுத்தவரையில் எமது சமூகத்திற்கு எம்மால் முடிந்த சேவைகளை செய்யவேண்டும் என்பதுதான் எமது நோக்குமாகும் என அவர் தெரிவித்தார்.

## மூதூரில் 24 டெங்கு தொற்றாளர்கள் அடையாளம்

(தோப்பூர் தினகரன் நிருபர்)

மூதூர் சுகாதார பிரிவில் இதுவரை 24 இற்கும் அதிகமான டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூதூர் , தோப்பூர் ,அல்லை நகர் உள்ளிட்ட பல இடங்களில் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட இடங்களில் புகைவிசிறும் செயற்பாடுகளும் சுகாதார வைத்திய அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுவதோடு இதுதொடர்பான களப்பரிசீலனைகள் முன்னெடுக்கப்பட்டு டெங்கு நுளம்புகள் பெருகுவதை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளும் உரிய தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு பொதுமக்களுக்கு உரிய ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

## தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் கச்சான் அறுவடை



(தோப்பூர் குறூப் நிருபர்)

தோப்பூர் கோட்டத்துக்குட்பட்ட தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட கச்சான் செய்கை அறுவடை கல்லூரி அதிபர் எஸ்.எம்.றஹீம் தலைமையில் நடைபெற்றது.

கல்லூரியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து அறுவடையில் ஈடுபட்டதுடன் கச்சான் அவிக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சுமார் 70 கொத்துக்கு மேல் கச்சான் அறுவடை செய்தமை குறிப்பிடத்தக்கது.


## பருவப் பெயர்ச்சி காலநிலை விசேட கலந்துரையாடல்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

பருவப் பெயர்ச்சி காலநிலை தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்ரினா முரளீதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்டத்தில் பருவப்பெயர்ச்சி மழையினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக இதன்போது அரசாங்க அதிபரினால் அதிகாரிகளிடம் விரிவான விளக்கங்கள் கோரப்பட்டதுடன் இதுதொடர்பாக விரிவான கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தனர்.

தாழ் நிலங்களில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளல், பட்டிருப்பு பாலம் அருகில் சல்வீனியா(ஆற்று வாழை) நிறைந்து காணப்படுவதனால் அவற்றை அகற்றுதல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன.



மேலும் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வடிகான்களை துப்புரவு செய்து வெள்ள நீரை வடிந்தோட செய்வது மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்துவித நிவாரண உதவிகளையும் உடனுக்குடன் வழங்க வேண்டுமெனவும் இதன்போது மாவட்ட அரசாங்க அதிபரினால் அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் எம்.ஏ.சி எம்.ரியாஸ், மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## கரவெட்டியில் எம்.ஜி.ஆரின் பிறந்தநாள் கொண்டாட்டம்

(வவுணதீவு தினகரன் நிருபர்)





வவுணதீவு ,கரவெட்டி பிரதேசத்தில் தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ராமச்சந்திரனின் 107ஆவது பிறந்தநாள் விழாவும், எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தின் ஏழாவது ஆண்டு நிறைவு நிகழ்வும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மன்றத்தின் தலைவர் வேலாப்போடிகெங்காதரம்தலைமையில்நடைபெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், எம்.ஜி ராமச்சந்திரனின் பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது 107 ஆவது பிறந்தநாள் வாழ்த்து பொறிக்கப்பட்ட கேக் வெட்டப்பட்டு அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதன்போது, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 107 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் கரவெட்டி எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தால் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## தொழில்நுட்பக் கல்லூரிக்கு 300 மாணவர்கள் உள்வாங்கல்

(மட்டக்களப்பு விசேட, மணல் சேனை நிருபர்கள்)

மட்டக்களப்பு மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (17) கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் எம்.சோமசூரியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். 2024 ஆம் ஆண்டு தொழில்நுட்பக் கல்லூரிக்கு 300 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பின்னர் மேலும் 200 மாணவர்கள் உள்வாங்குவதற்கு எதிர்பார்ப்பதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார்.





1983 முதல் உப தொழில்நுட்பக் கல்லூரியாக செயற்பட்டு 1993 ஆம் ஆண்டு முதல் தொழில்நுட்பக் கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டு மட்டக்களப்பு பிராந்திய மாணவர்களின் திறன் விருத்தியை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான தேசிய தொழில் தகைமை சான்றிதழ்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அறிவித்தல்

## மனு பற்றிய விளம்பரம்
## கொழும்பில் நடைபெறும்
## மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தில்
## (குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில்)

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பாகம் XII இனதும் ஒடுக்குதல் விதிகளினதும் கீழ் இல. 32, 2வது மாடி, காலி வீதி, தெஹிவளை மற்றும் தற்போது இல. 9A, டி பொன்சேகா பிளேஸ், பம்பலப்பிட்டி, கொழும்பு 04 இல் உள்ள ப்ளு ஓஷன் ரியாலிட்டி (பிரைவேட்) லிமிடெட்

நீதிமன்றத்தால் ஒடுக்கப்படும் விடயத்தில்

**மே. நீ (குடியியல்) வழக்கு இல: CHC 101/2023/CO**

1. மருத்துவர் நடராஜா பரம்சோதி
   இல: 28-5/5, பென் மற்றும் நான்சி அபார்ட்மெண்ட், ராமகிருஷ்ணா சாலை, கொழும்பு 06
2. ஷஷிகலா பரம்சோதி
   இல: 28-5/5, பென் மற்றும் நான்சி அபார்ட்மெண்ட், ராமகிருஷ்ணா சாலை, கொழும்பு 06

**மனுதாரர்கள்**

கொழும்பில் அமரும் மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தினால் (அதன் குடியியல் நியாயாத்திக்கத்தைப் பிரயோகிக்கையில்) மேலே பெயர்க் குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று, 2023, டிசம்பர் 7 ஆம் நாளன்று கொழும்பு 06, பென் மற்றும் நான்சி அபார்ட்மெண்ட் இல: 28-5/5 இல் உள்ள நடராஜா பரம்சோதி மற்றும் ஷஷிகலா பரம்சோதியினால் சொல்லப்பட்ட நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்பட்டதென்றும் சொல்லப்பட்ட மனுவானது 2024 மார்ச் 4 ஆம் திகதி மேற்படி நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றதுடன், சொல்லப்பட்ட மனு மீதான உத்தரவை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்க்க விரும்பும் மேற்படி நிறுவனத்தின் கடன் கொடுநர் அல்லது பங்களிப்பாளர் விசாரணையின் போது நேரிலோ அல்லது அவரது வழக்கறிஞர் அல்லது பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகலாம், அத்துடன் அம்மனுவின் பிரதியானது மேற்படி நிறுவனத்தின் கடன் கொடுநர் அல்லது பங்களிப்பாளர் ஆகியோருக்கு குறிப்பிடப்பட்ட கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கீழே கையொப்பமிட்டவர் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ்**
**மனுதாரர்களுக்கான பதிவு செய்யப்பட்ட அற்றோணிகள்**
**இல. 28 (மட்டம் 2),**
**டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை,**
**கொழும்பு 2.**

குறிப்பு: மேற்படி மனுவின் விசாரணைக்கு ஆஜராக விரும்பும் எந்தவொரு நபரும், அவ்வாறு செய்ய அவரது விருப்பத்தை மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தரணிகளான, எம். நித்தி முருகேசு & அசோசியேட்ஸ் என்போருக்கு எழுத்துப்பூர்வமாக அல்லது தபால் மூலமாக அறிவித்தல் வேண்டும். அறிவித்தலானது, நபரின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிட வேண்டும், அல்லது ஒரு நிறுவனம் என்றால் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட வேண்டும், அல்லது நபர் அல்லது நிறுவனம் அல்லது அவரது பதிவு செய்யப்பட்ட அற்றோணிகள் (எவரேனுமிருப்பின்) கையொப்பமிட வேண்டும். மேலும், அது சேவை செய்யப்பட்டு இருந்தால் அல்லது இடுகையிடப்பட்டிருந்தால், மேலே குறிப்பிடப்பட்டுள்ளவருக்கு குறிப்பிட்ட இலக்கத்திற்கு 2024.03.01 ஆம் நாளன்று பிற்பகல் 1 மணிக்கு பிறகு அடைய போதுமான நேரத்தில் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

**நித்தி முருகேசு அன்ட் அசோசியேட்ஸ்**
**மனுதாரர்களுக்காக பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞர்கள்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை – குளியாப்பிட்டிய

| | |
|---|---|
| 01 | 2024/2025ஆம் வருடங்களில் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல் |
| 02 | பிளவு வகையான (Split Type) வளிச்சீராக்கி இயந்திரம், சேர்விஸ் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக விலைமனுக் கோரல் - 2024/2025 |

01. 2024/2025ஆம் வருடங்களில் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல்
    - I. தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகள், வைத்தியசாலைக்கு வருகை தரும் நபர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் பாவனைக்காக குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையை நடாத்திக்கொண்டு செல்வதற்கு இயலுமை உள்ள இலங்கைப் பிரஜைகள், வியாபார நிறுவனங்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024/2025ஆம் வருடங்களில் சிற்றுண்டிச்சாலையை நடாத்திக் கொண்டு செல்வதற்கு தேசிய போட்டிரீதியில் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
    - II. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் வழங்குநர்கள் குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத 2500.00 ரூபா விண்ணப்பக் கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு மற்றும் நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் பணிப்பாளருக்கு வேண்டுகோள் கடிதமொன்றை கணக்கிடல் பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-01-20ஆம் திகதி முதல் 2024-02-08ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கேள்விப் படிவங்களை வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
02. பிளவு வகையான (Split Type) வளிச்சீராக்கி இயந்திரம், சேர்விஸ் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக விலைமனுக் கோரல் - 2024/2025
    - I. குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் 2024/2025ஆம் வருடங்களில் பிளவு மாதிரியிலான (Split Type) வளிச்சீராக்கி இயந்திரங்களின் சேர்விஸ் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
    - II. இந்த வைத்தியசாலையின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுடன், 2024-01-20ஆம் திகதி முதல் 2024-02-08ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும்.
    - III. மேற்கூறப்பட்ட வேலைக்காக 2024-05-10ஆம் திகதி வரை செல்லுபடியாகும் 20,000.00 ரூபா பெறுமதியான ''பணிப்பாளர், போதனா வைத்தியசாலை'' எனும் பெயரில் விலைக்கோரல் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அதை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட பிணை முறியொன்றின் மூலம் அல்லது இந்த வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் சமர்ப்பிக்கலாம்.

1. இரு பிரதிகளினால் விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
2. உரிய வகையில் கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ முத்திரையிடப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கடித உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''2024/2025ஆம் வருடங்களில் 1. குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்வதற்கான ஒப்பந்தம் அல்லது 2. வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் 2024/2025'' எனக் குறிப்பிட்டு 2024-02-09ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரத்தின் (2024-02-09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு) பின் விண்ணப்பங்கள் உடனடியாகத் திறக்கப்படும். விண்ணப்பதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் விண்ணப்பங்கள் திறக்கப்படும் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே மீண்டும் ஒப்படைக்கப்படும்.
3. குறித்த விலைமனுக்களை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
4. உத்தேச விண்ணப்பதாரர்கள் கேள்விப் படிவங்களை குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. விலைக்கோரல் முன்னோடிக் (பெறுகைக்கு முன்னரான) கூட்டம் 2024-02-01ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு சிற்றுண்டிச்சாலை விலைக்கோரலுக்காகவும், பி.ப. 12.30 மணிக்கு வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில் இடம்பெறும். அன்றைய தினத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
6. மேலதிக விபரங்களை குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் கணக்கிடல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 037-2281261 - நீடிப்பு 295/298 அல்லது 037-2284597.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குளியாப்பிட்டிய.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2024.01.17
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5362
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,078,416.00
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 7 5 0 6 8 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3604 சீட்டிழுப்பு திகதி 2024.01.17
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,285,796.56
ஆங்கில எழுத்து F வெற்றி இலக்கங்கள் 37 67 68 73 விசேட எழுத்து F
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 75353

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1710 2024.01.17 03895
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 420,819,726.00
ஆங்கில எழுத்து B சுப்பர் இலக்கம் 03 வெற்றி இலக்கங்கள் 01 03 09 28
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP
திகதி 2024.01.17 சீட்டிழுப்பு இலக்கம் 0188
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 6 5 3 2 1 0
L7 எழுத்து Q
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.23,441,034.84

ராசி சுப பலன்
திகதி 2024.01.17 சீட்டிழுப்பு இலக்கம் 671
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,140,898.08
வெற்றி இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 46 54 56 57
தனயோக இலக்கம் 07844 நாளுக்கான விதி எண் 29

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1392 2024.01.17
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,593,092.16
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 07 68 74 75 விசேட எழுத்து Z
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 51971

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| 064 -0XXX | NISSAN | SUNNY BHAB13 | 1992 |
| JX -4XXX | HYUNDAI | SONATA EF | 2001 |
| KY -9XXX | TOYOTA | PRIUS ZVW30 | 2012 |
| CAR -0XXX | RENAULT | KWID | 2016 |
| CBH -8XXX | DAIHATSU | MOVE LA1503 | 2016 |
| **கெப்** | | | |
| PD -5XXX | NISSAN | NAVARA AVENTURE | 2007 |
| **டிப்பர்** | | | |
| LI -7XXX | TATA | LPK1615 | 2011 |
| **லொறி** | | | |
| LB -8XXX | TOYOTA | DYNA 150 D | 2000 |
| LE -1XXX | TATA | ACE | 2007 |
| LF -9XXX | TATA | ACE | 2008 |
| LG -8XXX | TATA | ACE | 2009 |
| PQ -5XXX | TATA | ACE | 2011 |
| PU -1XXX | TATA | ACE EX | 2012 |
| PV -0XXX | TATA | ACE EX | 2012 |
| DAA -3XXX | MAHINDRA | MAXXIMO PLUS-VX | 2015 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| GR -2XXX | BAJAJ | BAJAJ AUTO | 2002 |
| JG -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QC -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QE -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QE -6XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QH -9XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QI -3XXX | BAJAJ | AUTO AR4S | 2006 |
| QJ -0XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QV -0XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| QV -2XXX | BAJAJ | BAJAJ 4S | 2009 |
| QW -0XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| YC -2XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| AAA -1XXX | BAJAJ | RE205 | 2012 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

### வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2024 ஜனவரி 19ஆம், 22ஆம், 23ஆம் மற்றும் 24ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2024 ஜனவரி 24ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும். கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**

www.skillsads.com

SLS Bank
ශ්‍රී ලංකා ඉතිරිකිරීමේ බැංකුව
இலங்கை சேமிப்பு வங்கி
Sri Lanka Savings Bank

# குத்தகை மற்றும் வாடகைக் கொள்வனவு தொகுப்பு விற்பனை

தேசிய சேமிப்பு வங்கியின் முழு உரித்தானதும் துணை நிறுவனமான இலங்கை சேமிப்பு வங்கியின் குத்தகை மற்றும் வாடகை கொள்வனவு தொகுப்பை விற்பனை செய்வதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். உயர்தர குத்தகை மற்றும் வாடகை கொள்வனவு தொகுப்பை கையேற்பதில் ஆர்வமுள்ள சாரார்களுக்கு அவர்களின் சுறுசுறுப்பான நிதியிடல் சேவைகள் தொழில் துறையை விஸ்தரிப்பதற்கான தனித்துவமான சந்தர்ப்பமொன்றாகும்.
இத்தொகுப்பு வாகனங்களை மாத்திரம் அடங்கியுள்ளது.

**ஆர்வத்தை வெளிப்படுத்தல் எப்படி?**

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் குத்தகை மற்றும் வாடகை கொள்வனவு தொகுப்பை கையேற்பதில் உங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கும் மேலதிக தகவலுக்குமாக தயவு செய்து பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**திரு. டி.டி.எஸ். விபூதி**

071 4286165 மின்னஞ்சல் Vibuthit@slsbl.lk

**திரு. எரன்ஜித் பத்மகுமார**
தொடர்பிலக்கம் - 071 8558217 மின்னஞ்சல் - eranjith@slsbl.lk ஆர்வமுள்ள சாரார் மேலதிக தகவலை 2024 ஜனவரி 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக பெற்றுக் கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். உங்கள் விசாரணைகளை பெற்றுக் கொண்டு இந்த வியப்பக்குரிய சந்தர்ப்பத்தை மேலும் விஸ்தரிப்பதற்காக நாம் எதிர்பார்க்கின்றோம்.

**வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி**
**இல. 265, வோட் பிளேஸ், கொழும்பு -07.**

**தொலைபேசி: 0112-674700-3**
**தொலைநகல்: 0112-674706**
**மின்னஞ்சல்: info@slsbl.lk**

**அமைச்சரவையில் அங்கம் வகிக்காத அரச**
**பெருந்தோட்ட தொழில்முயற்சி மறுசீரமைப்பு அமைச்சு**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**

# பலகை அறுவைக்கான மரங்களை விற்பனை செய்தல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் கொட்டகங்க, ஓபல்கல அரச தோட்டங்களில் முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்குள்ள 415 மரங்கள் மற்றும் வலஹந்துவ அரச தோட்டத்திலுள்ள வெட்டி அப்புறப்படுத்துவதற்குள்ள 1007 இறப்பர் மரங்களை கேள்வி மூலம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேற்படி விலைக்கோரலுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை கொழும்பு-10, ஸ்ரீ தம்ம மாவத்தை, 257ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து 2024-01-22ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-02-05ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரையிலும் மற்றும் கல்பிஹில்லயில் அமைந்துள்ள அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகத்தில் 2024-01-22ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-02-02ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையிலும், காலியில் அமைந்துள்ள வலஹந்துவ அரச தோட்ட அலுவலகத்தில் 1007 இறப்பர் மரங்களுக்காக மட்டுமான படிவங்களை 2024-01-22ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2024-02-02ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

அந்த கேள்வி ஆவணங்களை 2024-02-05ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் கொழும்பு-10, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். 2024-02-05ஆம் திகதி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்த உடனடுத்து அந்த விலைமனுப் படிவங்கள் தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். வெற்றிகரமான கேள்விதாரர் கேள்வி கையளிக்கப்பட்ட 07 நாட்களுக்குள் முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்யாத அனைத்துக் கேள்விகளும் இரத்துச் செய்யப்படும் என்பதுடன் கேள்வி முற்பணத் தொகை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஏதாவதொரு விலைக்கோரலை அல்லது விலைக்கோரலின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரத்தை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு-10.**
**2024-01-18.**

**விசாரணை: 0114-194879**
**0547-285326**
**0917-791281**

# Admission of Diploma Holders in Agriculture to Bachelor of Science Honours in Agriculture Degree Programme (2022/2023)

The Faculty of Agriculture, Rajarata University of Sri Lanka calls applications from Diploma Holders in Agriculture to follow the BSc Hons (Agriculture) Degree Programme (2022/2023). The duration of the degree programme is four (04) academic years. The medium of instruction is in English. Maximum of ten (10) candidates will be selected based on the performance of the written examination and the interview. The date and nature of the examination will be informed to the qualified applicants after shortlisting the applications. Employees in the Agricultural fields of Government and Private sector organizations, who possess the following qualifications, are eligible to apply for this programme.

**Admission Criteria :**

a) **Basic Qualifications :**

- GCE (A/L) (Old Syllabus): Minimum of four general passes at one sitting for Chemistry, Physics or Agriculture, Zoology and Botany

**or**

- GCE (A/L) (New Syllabus): Minimum of three passes at one sitting for Chemistry, Physics or Agriculture and Biology

**and**

- Full time two (02) year diploma course in Agriculture offered by the government or recognized private institution (minimum total credits 60) or equivalent qualifications

**and**

- **Experience:** Minimum of five (05) years research, teaching or field experience in the field of Agriculture in the government or recognized private sector organization after awarding the diploma certificate

b) **General Conditions :**

- Age should be below 40 years as at the closing date of the applications.
- The Head of institutions concerned should make arrangements to grant scholarships/study leave for a period of 04 years for the selected persons to follow the programme on full-time basis.
- Selected candidates are not entitled for the residential facilities at the University.

Application forms and other details can be obtained from the Faculty of Agriculture, Rajarata University of Sri Lanka after a cash payment of Rs.1000/= to the Faculty of Agriculture, Rajarata University of Sri Lanka. Those who wish to obtain application form and other relevant particulars by post, should send a self-addressed stamped envelope of the size 9"x 4" addressed to the Assistant Registrar, Faculty of Agriculture along with a Bank Deposit Slip to the value of Rs. 1,000/= written in favor of "Faculty of Agriculture, Rajarata University of Sri Lanka". Account No **008-1-001-4-8565998** held at the Peoples' Bank, Anuradhapura indicating the applicant's name and address. Completed applications should be forwarded through the respective Heads of the Institutions or Organization to reach the ***Assistant Registrar, Faculty of Agriculture, Rajarata University of Sri Lanka, Puliyankulama, Anuradhapura (025-2221613) on or before 28.02.2024.***

You can access the online application and other details from University website at http://www.rjt.ac.lk or Faculty website at https://foa.rjt.ac.lk/

**Registrar**
**Rajarata University of Sri Lanka**
20.01.2024

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BOC Lake House Branch Acc. No. 000000377



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**I. பின்வரும் பந்தியை நன்றாக வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்த புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

நான் பிறந்த சூழல் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற மலைத் தொடர்கள். இன்னிசை கீதம் இசைத்தபடியே பாய்ந்து வரும் அருவி. நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள் அவற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள். அக்காட்சிகளை பார்த்து கனிகளை உண்டு நான் உல்லாசமாகப் பறந்து கொண்டிருப்பேன்.

01. இங்கு கீதம் இசைத்து வருவது யாது? ……………………………

02. செயற்கை என்ற சொல்லில் எதிர்கருத்து சொல் யாது? ……………………………

03. பழங்கள் என்பதன் ஒத்த கருத்து சொல்லை எழுதுக. ……………………………

04. மரம் என்ற சொல்லின் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக. ……………………………

05. இங்கு இடம் பெறும் உவமைத் தொடரை எழுதுக ……………………………

06. மேற்குறித்த விவரம் யாரால் கூறப்படுகிறது? ……………………………

**II.**

07. வெற்றிடத்துக்குப் பொருத்தமான வினைச் சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i. நானும் அப்பாவும் சந்தைக்குச் ……………………… (சென்றோம் / சென்றேன்)

ii. நீர் தேங்கியுள்ள இடங்களில் நுளம்புகள் ……………………… (பெருக்கமடைகின்றன / பெருக்கமடைகின்றது)

iii. சனக்கூட்டம் மெதுவாகக் கலையத் ……………………… (தொடங்கியது / தொடங்கின)

iv. இன்று மழை பெய்தாலும் ……………………… (பெய்கிறது / பெய்யும்)

v. மாமா நேற்று கொழும்பிலிருந்து ……………………… (வருவார் / வந்தார்)

vi. என்னால் கட்டுரை ……………………… (எழுதப்பட்டது / எழுதியது)

08. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i. பசி - உணவு என்பது போல தாகத்துக்கு ……………………… (நீர் / பானம்)

ii. குருவி – கீச்சிடும் என்பது போல் தவளை ……………………… (கத்தும் / இரையும்)

iii. வாழையின் இளையது குட்டி – மாவின் இளையது ……………………… (பிள்ளை / கன்று)

09. பின்வரும் வாக்கியத்தை இறந்தகால வாக்கியமாக மாற்றி எழுதுக.

i. விவசாயிகள் மண்வெட்டிகளை எடுத்துக் கொண்டு காலையில் வயலுக்குச் செல்கின்றனர்.

……………………………………………………

10. பின்வரும் வாக்கியத்தை பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.

i. பிள்ளை புத்தகங்களை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் செல்கின்றது.

……………………………………………………

11. வெற்றிடத்திற்குப் பொருத்தமான எழுத்தின் கீழ்க் கோடிடுக.

i. மின்விசி…… (ரி / றி) ii. தி…….விழா (ரு / று)

12. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

i. அரசன் என்னையே நீ உணவாக உட்கொள் என்றான்

ii. ஞாலத்தின் மாணப்பெரியது எது

iii. பெரியவரே கதிரையில் அமர்ந்து ஓய்வெடுங்கள்

13. பின்வரும் சொற்களை சேர்த்தெழுதுக.

i. கல் + பாறை - ……………………… ii. கடல் + அலை - ………………………

14. பின்வரும் சொற்களை சரியான மொழி வடிவில் எழுதுக.

i. காச்சல் - ……………………… ii. தலவானி - ………………………

iii. இளனி - ………………………

15. பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்ய பொருத்தமான சொல்லை கீறிட்ட இடத்தில் எழுதுக.

i. அன்பான ……………………… ஆபத்தில் அறியலாம்

ii. ஆனைக்கும் ………………………

16. விடுகதைகளுக்குரிய விடைகளை எழுதுக.

i. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடுவான் அவன் யார்? ………………………

ii. காய்க்கும் பூக்கும் கலகலக்கும். காகம் இருக்க கொப்பில்லை அது என்ன?

……………………………………………………

17. பின்வரும் மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.

i. கைகொடுத்தல் - ………………………

18. பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கில சொற்களை எழுதுக.

i. நீர்வீழ்ச்சி - ……………………… ii. புகையிரதம் - ………………………

19. பின்வரும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

i. பந்தி காமரய - ………………………

ii. ஒபகே வயச கீயத? ………………………


20. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுங்கள்.

i. you / a / have / pencil ………………………

ii. go / may / to / I / office / the ………………………

21. எண் சட்டத்தில் காட்டப்பட்ட எண்ணை எழுதுக.

……………………………




22. 105 ஐ 3 ஆல் பெருக்கும் போது பெறப்படும் எண் யாது? ………………………

23. ஒரு லீற்றர் இனிப்புப் பானத்தை ஐந்து பேரிடையே சமமாக பங்கிடும் போது ஒருவருக்கு கிடைக்கும் பானத்தின் அளவு யாது?

……………………………………………………

24. ஒரு பூசணிக்காயின் நிறை 3kg 500g ஆகும். அதில் 1kg 600g விற்கப்பட்டால் எஞ்சியுள்ள பூசணிக்காயின் நிறை யாது?

……………………………………………………

25. 1kg சீனியை ரூபாய் 140.00 இற்கும், 50g தேயிலையை ரூபாய் 70.00 இற்கும் வாங்கிக் கொண்டு ரூபாய் 300.00 கடைக்காரரிடம் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?


……………………………………………………

26. 24 பப்பாசிப் பழங்களின் ¼ பகுதி பழுதடைந்து அகற்றப்பட்டால் எஞ்சியுள்ள பப்பாசிப் பழங்களின் எண்ணிக்கை யாது?

……………………………………………………

27. இரண்டு நண்பர்களிடம் இரண்டு றிபன் பட்டிகள் உள்ளன. ஒன்றின் நீளம் 3m 65cm மற்றையதின் நீளம் 2m 50cm ஆகும் எனவே இரண்டு றிபன் பட்டிகளினதும் நீளம் யாது?


……………………………………………………

28. 

கடிகார முகத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தை அரை மணித்தியாலம் பிந்திய நேரத்தில் எழுதுக.

……………………………………………………

29. வகுப்பறையில் மாணவர்கள் விரும்பும் பாடங்களை காட்டும் வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




i. அதிகமான **மாணவர்கள்** விரும்பும் பாடம் எது?

……………………………

ii. வேறு எந்த பாடங்களை விரும்பும் மாணவர்களின் கூட்டுத்தொகை தமிழ் பாடத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு சமமாகும்?

……………………………

**III. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

30. குப்பைகளை அகற்றும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்
i. குப்பைகளை எரித்தல் வேண்டும்.
ii. குப்பைகளை வகை வகையாகப் பிரித்து குப்பைக் கூடைகளில் போட வேண்டும்.
iii. பாதையில் வீசுதல் வேண்டும்.

31. நூல் நிலையத்தில் அமைதி பேணப்பட வேண்டும் என்பதற்கான காரணம்
i. அடுத்தவர்களின் வாசிப்புக்கு இடையூறு ஏற்படும் என்பதால்
ii. வாசிக்கும் நேரம் குறைவடைவதால்
iii. நூல் நிலையத்தினுள் கதைத்தல் தடை செய்யப்பட்டுள்ளதால்

32. அரச இலச்சினையில் சௌபாக்கியமும், தன்னிறைவு என்பவற்றைக் குறிக்கும் குறியீடுகள் எது?
i. சந்திரன் / சூரியன் ii. நெற்கதிர்கள் / நிறைகுடம்
iii. நிறைகுடம் / வாளேந்திய சிங்கம்

33. பூ பூக்காத தாவரம்?
i. பலா ii. மா iii. மடுப்பனை


34. இலைகளின் ஊடாக இனத்தை விருத்தி செய்யும் தாவரம்
i. சதைக்கரைச்சான் ii. காற்றாளை iii. அன்னாசி

35. கூடுகளில் முட்டையிடாத பிராணி
i. வண்ணத்துப்பூச்சி ii. செவ்வெறும்பு iii. தேனீ

36. ஊர்ந்து செல்லும் ஈரத்தன்மையான திரவத்தை வெளிவிடும் பிராணி எது?
i. ஆமை ii. நத்தை iii. சாரைப்பாம்பு

37. ஆமையின் விசேட திறன்களின் ஒன்று
i. நீளமான நாக்கின் ஊடாக இரை தேடும்
ii. பாதுகாப்புக்காக ஒளிந்து கொள்ளும்
iii. விவசாய வேலைகளுக்கு உதவுதல்

38. படத்தில் காணப்படும் தையல் முறை
i. சோம் தையல்
ii. குறுக்குத் தையல்
iii. கம்பளித் தையல்



39. விரைவாக உக்காத பொருட்கள் எவை?
i. பிளாஸ்டிக் ii. இலைதழைகள் iii. காட்போட்

40. பொருட்களை வாங்கும் போது கவனிக்கப்பட வேண்டியது
i. பொருட்களில் அடங்கியுள்ளவை
ii. காலாவதியாகும் திகதி
iii. பல்வேறு வர்ணங்கள்

(11ஆம் பக்கம் பார்க்க)




(10 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

41. காற்று வீசும் திசையைக் காட்டும் உபகரணம்
i. மழைமானி ii. வெப்பமானி iii. காற்று திசைக்காட்டி

42. ஆணிவேர் காணப்படாத மரம் ஒன்று
i. கொய்யா ii. தென்னை iii. பலா

43. அபரபக்க நிலவிற்குரிய வடிவத்தை தெரிவு செய்க.

i.  ii.  iii. 


44. மின்னல் மின்னும் போது முதலில் ஏற்படுவது
i. ஒலி ii. ஒளி iii. நெருப்பு

45. தைக்கும்போது விரலின் பாதுகாப்பிற்காக அணியும் உபகரணமாவது
i. தீதாள் ii. அத்தாங்கு iii. மேலங்கி (ஏப்ரன்)

46. சமூக விரோதச் செயல்களில் ஒன்று அல்லாதது
i. பிள்ளைகளை துஷ்பிரயோகம் செய்தல்
ii. புகைப்பிடித்தல்
iii. போட்டிகளில் வெற்றி பெறுதல்

47. துடுப்பு போட்டு தோணி ஓட்டி ‘ஏலேலோ ஜலசா...’ எனும் பாடல்
i. அரிவு வெட்டும் பாடல் ii. மீனவப் பாடல் iii. கும்மிப்பாடல்

48. படத்தில் காட்டப்பட்டுள்ள பூவில் ‘A’ என்ற எழுத்தில் குறிக்கப்படுவது யாது?
i. மகரந்தம் ii. குறி
iii. தம்பம்





49. முலையூட்டும் பிராணி அல்லாதது
i. நாய் ii. கிளி iii. வௌவால்

50. தொற்று நீக்கியாக கருதப்படுவது
i. கற்றாளை ii. இஞ்சி iii. மஞ்சள்

51. படத்தில் உள்ள வாகனத்தை விசேடமாக பயன்படுத்துபவர்கள்
i. இராணுவ வீரர்கள்
ii. பாடசாலை மாணவர்கள்
iii. நோயாளர்கள்




52. “முன்னால் உள்ள சுற்று வட்டம்” எனும் சமிக்சைக்குரிய படம் எது?

i.  ii.  iii. 

53. தொலைபேசி எண் ஒன்றில் உள்ள இலக்கங்களின் எண்ணிக்கை
i. 8 ii. 9 iii. 10

54. திரவ மருந்துகளை பயன்படுத்த வேண்டிய முறை
i. குலுக்காமல் வைத்திருந்து குடிக்க வேண்டும்.
ii. தினமும் குலுக்கிய பின்னர் குடிக்க வேண்டும்.
iii. குலுக்கிய பின்னர் ஓரிடத்தில் வைத்துவிட்டு குடிக்க வேண்டும்.

55. மின்சாரம் தாக்கினால் உடனே செய்ய வேண்டியது
i. பிரதான ஆழியை உடனடியாக அணைத்தல்
ii. தொட்டு தூக்குதல்
iii. மின் சோதிப்பானை பயன்படுத்தல்

56. உடற்தொழிற்பாட்டை அதிகரிப்பதற்கு ஈடுபடக்கூடிய விளையாட்டுக்கள்
i. சதுரங்கம் ii. பல்லாங்குழி iii. கெந்தி பிடித்தல்

57. சமையலுக்குப் பயன்படுத்தக் கூடிய காய்கறிகள் எவ்வாறு இருக்க வேண்டும்?
i. குளிர்சாதனப்பெட்டியில் வைத்திருக்க வேண்டும்.
ii. உடன் காய்கறிகளாக இருக்க வேண்டும்.
iii. நாட்பட்ட காய்கறிகளாக இருக்க வேண்டும்.

58. பாடசாலைக்கு கிடைக்கப்பெறும் பண்டங்கள், உபகரணங்களைப் பதியும் பதிவேட்டின் பெயர்
i. பாடப்பதிவு ii. வரவுப்பதிவு iii. பொருட்பதிவு

59. சாணைப்பிடித்து பயன்படுத்தப்படும் பொருள்
i. கத்தி ii. அரம் iii. திருகாணிச் செலுத்தி

60. “நான் எனது நாடான இலங்கையை மிகவும் நேசிக்கிறேன்” என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலை தொடர்பு சரியான முறையில் பேணப்பட வேண்டும். கூறிய கருத்தை மீண்டும் கூறலாகாது. கட்டாயமாக ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருக்க வேண்டும்.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

## கடந்த வார (12.01.2024) வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 11. 3 | 21. 2 | 31. 2 |
| 02. 2 | 12. 1 | 22. 2 | 32. 3 |
| 03. 2 | 13. 2 | 23. 1 | 33. 1 |
| 04. 2 | 14. 3 | 24. 3 | 34. 2 |
| 05. 3 | 15. 2 | 25. 3 | 35. 3 |
| 06. 2 | 16. 3 | 26. 2 | 36. 3 |
| 07. 1 | 17. 3 | 27. 2 | 37. 1 |
| 08. 1 | 18. 1 | 28. 3 | 38. 3 |
| 09. 3 | 19. 2 | 29. 2 | 39. 1 |
| 10. 2 | 20. 3 | 30. 2 | 40. 2 |

# மரக்கறிகளுக்கு பதிலாக யாழ். மாவட்டத்தில் மாற்று பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

(சாவகச்சேரி விசேட நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள மரக்கறி விலையேற்றத்தை தவிர்க்கும் முகமாக மாற்றீட்டு பயிர்ச்செய்கைகளை யாழ். மாவட்டத்தில் முன்னெடுப்பது சம்பந்தமாக விவசாய அமைச்சில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெற்றது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தற்போது நிலவும் மரக்கறி தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன. மரக்கறிகளை யாழ். மாவட்டத்திலிருந்து பருவகால அடிப்படையில் உற்பத்தி செய்வதன் ஊடாக இவ்வாறான தட்டுப்பாடுகள் மற்றும் விலைத்தளம்பலை தவிர்க்க முடியுமெனவும் யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய இவ்வாண்டில் புதிய திட்டங்களை உருவாக்க இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன.

இவற்றுடன் யாழ்ப்பாணத்துக்கே உரிய சின்ன வெங்காயம், பச்சைமிளகாய் உற்பத்தியை மேம்படுத்துவது தொடர்பாகவும், யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் திராட்சைப் பழங்களை கொண்டு பழச்சாறு உற்பத்தியை யாழ்.மாவட்டத்திலேயே மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டன. மேலும், யாழ் மாவட்டத்தில் விவசாய அமைச்சின் கீழ் முன்னெடுக்கப்படும் இதர திட்டங்களின் ஊடாக விவசாய உற்பத்திகளை பெறுமதி சேர் உற்பத்திகளாக மாற்றுவது தொடர்பாக விவசாய அமைச்சு கவனம் செலுத்தவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்தாண்டு இறுதியில் விவசாய அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த போது, விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டன. விவசாய நிலங்களுக்கு குரங்குகள், கட்டாக்காலி கால்நடைகளால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கான வேலிகள், வாயுத் துப்பாக்கி உள்ளிட்டவற்றை வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டதுடன், யாழ் மாவட்ட விவசாயிகளுக்கான விவசாய மின் இணைப்புக்குரிய கட்டணத்தில் மானியம் வழங்குவது தொடர்பான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், உள்ளூர் விதைகளை பாதுகாக்கும் தன்மை விவசாயிகள் மட்டத்தில் குறைவடைந்து செல்வதால் விதைகளை இறக்குமதி செய்யும் நிலை அதிகரித்து செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டது. இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் விதைகள் விவசாயிகளுக்கு தேவையான காலத்தில் வழங்கப்படாததால், நாட்டில் உணவுத்தட்டுப்பாடுகள் ஏற்படுவதாகவும், அதனைப் போக்க உணவுப்பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதால் உள்ளூர் விவசாயிகள் பாதிப்பை எதிர்கொள்வதாகவும் இக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

# தலைமன்னார், இராமேஸ்வரம் இடையில் படகுச்சேவை



தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான படகு சேவையை ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடலொன்று அண்மையில் சென்னையில் நடைபெற்றது.

இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான சுற்றுலா மற்றும் அது சார்ந்த நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கில் இப்படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

சென்னைக்கு விஜயம் செய்த *Pathfinder* மன்ற தலைவர் பேர்னாட் குணதிலக உள்ளிட்ட குழுவினர், தமிழக அரசாங்கத்தின் சுற்றுலாத் துறை அமைச்சர் கே. இராமச்சந்திரன் மற்றும் சுற்றுலா, கலாசாரம், மத விவகார நன்கொடைகள் தொடர்பான திணைக்களத்தின் மேலதிக தலைமைச் செயலாளர் கலாநிதி கே.மணிவாசன் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

# கொக்குவிலில் பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

(யாழ். விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு தாக்கம் அதிகரித்துள்ளமையால் நேற்றைய தினம் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பகுதியில் விசேட டெங்கொழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர், வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் நேரடி பங்கேற்புடன் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. கொக்குவில் பகுதியிலுள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விஜயம் மேற்கொண்டதோடு வீடுகளில் டெங்கு நுளம்பு காணப்படும் இடங்கள் அகற்றப்பட்டதோடு பல வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கைகளும் வழங்கப்பட்டன.

# மன்னாரில் 24 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

(மன்னார் குறூப் நிருபர்)

மன்னார் தாழ்வுபாடு பகுதியிலுள்ள காணியொன்றிலிருந்து நேற்று ஒரு தொகை போதைமாத்திரைகள் மீட்கப்பட்டதோடு, சந்தேகநபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

காணியொன்றில் போதை மாத்திரைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக தாழ்வுபாடு கடற்படைக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மன்னார் போதைப்பொருள் குற்றத்தடுப்பு பிரிவினர் இணைந்து இச்சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது இக்காணியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 150 மில்லிகிராம் எடை கொண்ட 24 ஆயிரம் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதோடு, சந்தேகநபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மீட்கப்பட்ட போதை மாத்திரைகளுடன் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் அவருடைய மனைவி ஆகியோர் நேற்று கண்டி கதிரேசன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டனர். இவர்களுடன் கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகர் டொக்டர் எஸ்.ஆதிராவும் விசேட பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்டார்.
(படங்கள்; நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# குரங்குகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த நடவடிக்கை

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை மாவட்டத்தில் அதிகரித்து வரும் குரங்குகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்காக குரங்குகளுக்கு கருத்தடை செய்யும் வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்ட தலைவருமான நாலக பண்டார கோட்டகொட தெரிவித்தார். மாத்தளை மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குரங்குத் தொல்லையை கருத்திற்கொண்டு ஆண் குரங்குகளுக்கு கருத்தடை திட்டத்தை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. பேராதனை பல்கலைக்கழக கால்நடை மருத்துவ பிரிவும் பேராதனை போதனா வைத்தியசாலையும் இணைந்து கடந்த வருடம் இத்திட்டத்தை மேற்கொள்ளவிருப்பதாக தெரிவித்தனர்.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (PRDA) (மேல் மாகாணம்)

### மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு மற்றும் நிர்மாணம், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி - (மேல் மாகாணம்)

01. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மேல் மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக, பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

02. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் எதிராக கூறப்பட்டுள்ள **CIDA** (ICTAD) பதிவு தேவைப்பாட்டை பூர்த்தி செய்பவராகவும் மற்றும் கம்பனிப் பதிவானது மேல் மாகாண நிருவாக எல்லையினுள் அமைந்திருத்தலும் வேண்டும்.

03. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக ஒவ்வொரு விலைமனுவிற்கும் கேள்வியிடக்கூடிய தொகையானது 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்படின் விலைமனுதாரரானவர் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகளின் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-12, செயின்ற் செபஸ்தியன் மேடு, 59 ஆம் இலக்கத்திலுள்ள மேல் மாகாணத்திற்கான மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2 ஆம் மாடியிலுள்ள பெறுகை அலுவலகத்திலிருந்து பெற்று (தொலைபேசி: 011-4849835) 2024 ஜனவரி 19 ஆம் திகதியன்று ஆரம்பமாகும் வகையில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மேலேயுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

2023.12.04 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு ஜே.எம்.பீ.டபிள்யு. திலக்கரத்ன அத்தாட்சிப்படுத்திய 2011.09.19 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1847இன் பேரில் மொரட்டுவை, ராவதாவத்த, காலி வீதி, இல. 435 எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி சந்திரிகா மரியா சொசெல் என்பவரிடமிருந்து BOC வீடமைப்புக் கடன் மீது 2023.11.13 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் **ரூ. 16,066,716.41** (பதினாறு மில்லியன் பதினாறு ஆயிரத்து எழுநூற்றுப் பதினாறு ரூபாய் நாற்பத்தொரு சதமும்) அத்துடன் **ரூ. 8,474,134.99** (எட்டு மில்லியன் நாநூற்று எழுபத்து நான்கு ஆயிரத்து நூற்று முப்பத்து நான்கு ரூபாய் தொண்ணூற்றொன்பது சதம்) மீது ஆண்டுக்கு பன்னிரெண்டு தசம் ஐந்து பூச்சியம் (12.50%) வீதத்தில் 2023.11.14 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும், வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேற்குறிப்பிட்ட 2011.09.19 திகதியிட்ட ஈட்டுமுறி இல. 1847 இன் பேரில் BOC வீடமைப்புக் கடன் மீது **ரூ. 16,066,716.41** (பதினாறு மில்லியன் பதினாறு ஆயிரத்து எழுநூற்றுப் பதினாறு ரூபாய் நாற்பத்தொரு சதமும்) அத்துடன் 2023.11.14 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மொரட்டுவை மேற்தரக்கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை.**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பல்லேபற்றுவில் மொரட்டுவை மாநகர சபை எல்லைகளுள் மொரட்டுவையில் அமைந்த (70 ஆம் இலக்க உறுதியின் பிரகாரம் மொரட்டுவை, கொரல்லவெல்ல, சென் பீட்டர்ஸ் றோட்) சென் பீட்டர்ஸ் 1ஆம் ஒழுங்கை வரிமதிப்பு இல. 2/1/1 ஐக் கொண்ட கொரகன்வலகட மாதங்கஹவத்த என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே.டபிள்யு. ரொட்ரிகோ தயாரித்த 1994 செப்டெம்பர் 20 திகதியிட்ட வரைபடம் இல. 1388 எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 1 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு 1, வடக்கில் அனில் சாந்த பெர்ணாண்டோவின் ஆதனமும், கிழக்கில் லுசிட்டா பெர்ணாண்டோ, தெற்கில் சென் பீட்டர்ஸ் ஒழுங்கையும், மேற்கில் என்.ஜீ. வீரசூரியவின் ஆதனமும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1388 இன் பிரகாரம் பதின்மூன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.13.50) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நுகேகொடை, தெல்கந்த காணிப் பதிவகத்தில் D311/08இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திருமதி என்.சீ. அக்மீமன**
**பிரதான முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக்கிளை,**
**மொரட்டுவை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

## கட்டான பிரதேச சபை

## பெறுகைக்கான கேள்வி கோரல்

கட்டான பிரதேச சபைக்கு கீழ்க்காணும் கணனி மென்பொருள் (INTERNAL SOFTWARE SOLUTION AND WEB BASE) வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

i. கலப்பு வருமான முகாமைத்துவம்
ii. நிலுவை வருமான முகாமைத்துவம்
iii. செலவு முகாமைத்துவ அமைப்பு
iv. கணக்கு மற்றும் அறிக்கை முகாமைத்துவம்
v. வழங்கல் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம்
vi. காசாளர் முகாமைத்துவம்
vii. காகிதம் மற்றும் காகித கோவை முகாமைத்துவம்
viii. வெப் அடிப்படையிலான முறைப்பாட்டு முகாமைத்துவம்
ix. வெப் அடிப்படையிலான வியாபார வரி செலுத்தல் அமைப்பு
x. வெப் அடிப்படையிலான வியாபார அனுமதிப் பத்திரத்திற்கான கொடுப்பனவு

02. விலைமனுக்கள் கட்டான பிரதேச சபையினால் வழங்கப்படும் மாதிரியிலேயே சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. ரூ. 500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பங்கள் மற்றும் அறிவுறுத்தல் பத்திரங்களை தலைமையகத்தில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம்.


04. பெறுகை ஆவணங்கள் விநியோகித்தல் 2024 பெப்ரவரி 02 பி.ப. 2.00 வரை இடம் பெறுவதுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் 2024 பெப்ரவரி 05 மு.ப. 10.00 இற்கு முடிவடையும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

05. உங்களது கேள்வி ஆவணங்களை 'செயலாளர், கட்டான பிரதேச சபை, தெமங்ஹந்திய' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைக்குமாறு அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அல்லது கையோடு ஒப்படைக்கலாம்.

06. சமர்ப்பிக்கப்படும் கேள்விகளில் ஒரு பகுதியை அல்லது முழுமையாக ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**செயலாளர் மற்றும் கட்டான பிரதேச சபை அதிகாரம்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**கட்டான பிரதேச சபை.**
**தெமங்ஹந்திய.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified


For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

## மரணசாசனமில்லா சொத்தை உரிமை கோருவதற்கான அறிவித்தல்

### 1998ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க உரித்துப் பதிவுச் சட்டம் பிரிவு 55

குருநாகல் மாவட்டத்தின் குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவில் கங்கொட என்னும் கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரள் வரைபட இல. 420371 கண்ட இல. 07 பத்திர இல. 01, துண்ட இல. 79ஐக் கொண்ட காணியை உடைமை கொண்டிருந்த இல. 3/64, வில்கொட வீதி, குருநாகல் என்னும் விலாசத்தைக் கொண்ட ஜயசுந்தர முதியன்சலாகே நிஹால் ஆரியரத்ன பண்டா ஜயசுந்தர என்னும் ஆள் 08.04.2021ஆந் திகதி மரணமடைந்துள்ளாார் அவரது உரித்தாளர் எவரேனும் பழைய பிரதேச சபைக் கட்டிடம், மல்பிட்டி, போயகனை என்ற இடத்தில் அமைந்துள்ள காணி உரித்து நிர்ணயத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்துக்கு 2024.02.02ஆந் திகதிக்கு முன்னர் சமுகம்தரவும்.

**ஆணையாளர் நாயகம்,**
**காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்.**

---

மாகாண வீதி, போக்குவரத்து கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மேல் மாகாணம்)

## பட்டய கட்டடக் கலைஞர்களை பதிவு செய்தல் – 2024ம் ஆண்டு

எமது அதிகாரசபையினால் மேல் மாகாணத்திற்குள் மேற்கொள்ளப்படும் வீதி, கட்டிடம் மற்றும் பாலங்களின் புதிய நிர்மாண விடயங்களுக்கு தேவையான பட்டய கட்டடக் கலைஞர்களை 2024ம் ஆண்டிற்கு பதிவு செய்வதற்காக 2024.01.19 முதல் 2024.02.09 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பட்டய கட்டட நிர்மாணக் கலைஞராக பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரிகள் பட்டய கட்டட நிர்மாணக் கலைஞர் நிறுவனத்தின் பதிவை சமர்ப்பித்தல் வேண்டும்.
02. பதிவு செய்வதற்கு உத்தேசிக்கும் விண்ணப்பதாரிகள் தாம் பெற்றுக் கொண்ட விண்ணப்பத்தை முறையாகப் பூர்த்தி செய்து அதனோடு சம்பந்தப்பட்ட ஆவணங்களின் உறுதி செய்த பிரதிகள் சகிதம் 2024.02.29ம் திகதிக்கு முன்னர் பெறுகைப் பிரிவிற்கு ஒப்படைத்து பதிவைப் பெற்றுக் கொள்ளலாம்.
03. பட்டய கட்டடக் கலைஞராக பதிவு செய்வதற்காக பதிவுக் கட்டணமாக ரூ. 1000.00 செலுத்துதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக 18% வெட் (VAT) தொகையும் அறவிடப்படும் இதற்கான விண்ணப்பங்களை தலைமையகத்தின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

    (அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மாத்திரம் கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம்)

தொ. பே. இலக்கம் 011-4849835

**பொது முகாமையாளர்,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா),**
**இல. 59, செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

2024.01.17ம் திகதி

---

## நகர சபை, கெஸ்பாவ

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### 2 எண்ணிக்கையான பயணிகள் மின்தூக்கிகளை வழங்கல் மற்றும் நிறுவுதல்

1. கெஸ்பாவவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கெஸ்பாவ நகர சபை கட்டிடத்தில் 2 பயணிகள் மின்தூக்கிகளை வழங்கல் மற்றும் நிறுவுதல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கெஸ்பாவ நகர சபையின் செயலாளர் இப்போது அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது பகிரங்க கேள்வி சமர்ப்பித்தலின் மூலம் நடத்தப்படும் (தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்)
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதியை பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாதவராகவிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை வேலைகளுக்கான அத்தியட்சகரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
5. 2024 ஜனவரி 19 ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ரவரி 08 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரம் ரூபாவை (3,000 ரூபா) செலுத்திய பின்னர், கெஸ்பாவ நகர சபை செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் செயலாளர், கெஸ்பாவ நகர சபை, கெஸ்பாவ என முகவரியிடப்பட்டு 2024 பெப்ரவரி 09 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் விலைமனுக்கோரல் நிறுவனத்திலிருந்து சட்டபூர்வமாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.
7. விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட வேண்டிய கால எல்லையானது 90 நாட்களாகும்.
8. அனைத்து விலைமனுக்களும் 150,000 ரூபா பெறுமதியானதும் பெறுகை வழிகாட்டிகளில் கூறப்பட்டவாறு இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்ற விலைமனுப் பிணை உத்தரவாதமொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விபரங்கள் மற்றும் தெளிவுறுத்தல்களுக்காக கெஸ்பாவ நகர சபையின் வேலைகளுக்கான அத்தியட்சகருடன் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி: 0112 614 250, 0112 618 100**

**கெஸ்பாவ நகர சபை**
2024.01.17

**பெறுகைக் குழுத் தலைவர்**
**மற்றும் செயலாளர்**
**கெஸ்பாவ நகர சபை.**

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டு 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் (397 ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.12.04 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு சௌம்யா ரமணி டி சில்வா அத்தாட்சிப்படுத்திய 2011 செப்டெம்பர் 13 திகதியிட்ட ஈட்டு முறி இல. 4347 இன் பேரில் ஆண்டிஅம்பலம, பீல்லவத்த, லங்கா லாண்ட்ஸ், இல. 27 எனும் முகவரியில் அமைந்த எம்.எஸ். இலேஷன் ஓப்செந் பிரைவேற் லிமிடெற்றிடமிருந்து (பணிப்பாளர்கள்: ஆண்டிஅம்பலம, பீல்லவத்த, லங்கா லாண்ட்ஸ், இல. 27 எனும் முகவரியைச் சேர்ந்த திரு. செம்புகுட்டி ஆரச்சிகே பிரசாத் சந்ரமணி சில்வா மற்றும் திருமதி செம்புகுட்டி ஆரச்சி ஞானா சமிதா) **1 ஆவது கடன்** மீது **2023.11.03** வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் **ரூ. 9,411,394.04** (ஒன்பது மில்லியன் நானூற்றுப் பதினொரு ஆயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு ரூபாய் நான்கு சதமும்) அத்துடன் பாக்கி முதல் நிலுவை மீது **2023.11.04** தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இரண்டு வீத (2%) தண்டப்பண வட்டியும், **2 ஆவது கடன்** மீது **2023.11.03** வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 2,906,266.58 ( இரண்டு மில்லியன் தொள்ளாயிரத்து ஆறு ஆயிரத்து இருநூற்று அறுபத்தாறு ரூபாய் ஐம்பத்தெட்டு சதமும்) அத்துடன் பாக்கி முதல் நிலுவை மீது 2023.11.04 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் ஆண்டுக்கு இரண்டு வீத (2%) தண்டப்பண வட்டியும் **3 ஆவது கடன்** மீது **2023.11.03** வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ. 6,692,375.92 (ஆறு மில்லியன் அறுநூற்று தொண்ணூற்றிரண்டு ஆயிரத்து முந்நூற்று எழுபத்தைந்து ரூபாய் தொண்ணூற்றிரண்டு சதமும்) அத்துடன் பாக்கி முதல் நிலுவை மீது 2023.11.04 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் ஆண்டுக்கு இரண்டு வீத (2%) தண்டப்பண வட்டியும் **4 ஆவது கடன் மீது 137,115.93** (நூற்று முப்பத்தேழு ஆயிரத்து நூற்றுப்பதினைந்து ரூபாய் தொண்ணூற்று மூன்று சதமும்) அத்துடன் பாக்கி முதல் நிலுவை மீது **2023.11.04** தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் ஆண்டுக்கு இரண்டு வீத (2%) தண்டப்பண வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்கூறிய 2011 செப்டெம்பர் 13 திகதியிட்ட ஈட்டு முறி இல. 4347 இன் பேரில் **1 ஆவது கடன்** மீது **ரூ. 9,411,394.04** (ஒன்பது மில்லியன் நானூற்றுப் பதினொரு ஆயிரத்து முந்நூற்று தொண்ணூற்று நான்கு ரூபாய் நான்கு சதமும்) **2 ஆவது கடன் மீது ரூ. 2,906,266.58** ( இரண்டு மில்லியன் தொள்ளாயிரத்து ஆறு ஆயிரத்து இருநூற்று அறுபத்தாறு ரூபாய் ஐம்பத்தெட்டு சதமும்) **3 ஆவது கடன் மீது ரூ. 6,692,375.92** (ஆறு மில்லியன் அறுநூற்று தொண்ணூற்றிரண்டு ஆயிரத்து முந்நூற்று எழுபத்தைந்து ரூபாய் தொண்ணூற்றிரண்டு சதமும்) **4 ஆவது கடன் மீது 137,115.93** (நூற்று முப்பத்தேழு ஆயிரத்து நூற்றுப்பதினைந்து ரூபாய் தொண்ணூற்று மூன்று சதமும்) அத்துடன் **2023.11.04** தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணைகளில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை எனும் முகவரியைச் சேர்ந்த M/s T.&H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச்.ரீ. கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி சீதுவைக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை.**

1. மேல் மாகாணம் நீர்கொழும்பு பதிவுப் பிரிவில் கம்பஹா மாவட்டத்தில் அலுத்குரு வடக்கு B கோரளை தாஸியபற்றுவில் கட்டான பிரதேச செயலகப் பிரிவில் மற்றும் பிரதேச சபை எல்லைகளுள் ஆண்டிஅம்பலம கிழக்கு 155 பி இலக்க கிராம சேவகர் பிரிவில் ஆண்டிஅம்பலம கிராமத்தில் அமைந்த "பீல்லவத்த எஸ்டேற்" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எல். எஸ்.பி. பெர்ணான்டோ தயாரித்த 1985.06.20 திகதியிட்ட வரைபடம் இல. 1367 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 26 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு,அதாவது மேற்கூறிய காணித்துண்டு 26, வடக்கில் காணித்துண்டு 27உம், கிழக்கில் வரைபடம் இல. 506 இல் காணித்துண்டு Bயும் தெற்கில் காணித்துண்டு 25உம் மேற்கில் காணித்துண்டு 217 (பாதை ஒதுக்கம்) எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1367 இன் பிரகாரம் பதினெட்டு தசம் ஏழு பேர்ச்சுகள் (ஏ.0,றூ.0,பே.18.7) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் C 1013/72 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
2. மேற்கூறிய ஆண்டிஅம்பலமவில் அமைந்த "பீல்லவத்த எஸ்டேற்" என அழைக்கும் காணி மேற்கூறிய வரைபடம் இல. 1367 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 27 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் காணித்துண்டு 28உம், கிழக்கில் வரைபடம் இல. 506 இல் காணித்துண்டு Bயும் தெற்கில் காணித்துண்டு 26உம் மேற்கில் காணித்துண்டு 217 எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1367 இன் பிரகாரம் பதினெட்டு தசம் ஏழு பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.18.7) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் C 1013/73 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
3. மேற்கூறிய ஆண்டிஅம்பலமவில் அமைந்த "பீல்லவத்த எஸ்டேற்" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.ஏ.ரூபசிங்ஹ தயாரித்த 1984 ஆகஸ்ட் 27 திகதியிட்ட வரைபடம் இல. 56/1984 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 86 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் காணித்துண்டுகள் 98 மற்றும் 92 உம், கிழக்கில் காணித்துண்டு 87உம் தெற்கில் காணித்துண்டு 85உம் மேற்கில் இக் காணியின் மீதிப் பாகம் ஐ.எஸ். சில்வாவின் காணித்துண்டு A உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 56/1984 இன் பிரகாரம் பதினொன்று தசம் மூன்று பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.11.30) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் C 889/268 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
4. மேற்கூறிய ஆண்டிஅம்பலம கிராமத்தில் அமைந்த "பீல்லவத்த எஸ்டேற்" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே.ஏ.ரூபசிங்ஹ தயாரித்த 2000 ஒக்டோபர் 30 திகதியிட்ட வரைபடம் இல. 654/2000 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு X என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடக்கில் காணித்துண்டுகள் 99 மற்றும் 100உம், கிழக்கில் காணித்துண்டுகள் 92 மற்றும் 96 எனினும் 96என பதிவுசெய்துள்ளதும் தெற்கில் காணித்துண்டு 36 மற்றும் 92 (15 அடி அகல பாதைக்கான ஒதுக்கம்) மேற்கில் இக் காணியின் மீதிப் பாகம் ஐ.எஸ். சில்வாவின் காணித்துண்டு A உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 654/2000 இன் பிரகாரம் இருபது தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0, பே.20.90) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் C 1013/74 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிட்ட இரண்டாவது அட்டவணை.**

மேற்கூறிய ஆன்டிஅம்பலமவில் அமைந்த **"பீல்லவத்த எஸ்டேற்"** என அழைக்கும் காணி வரைபடம் இல. 1367 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டு 216 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, **வடக்கில்** காணித்துண்டுகள் 217 மற்றும் 219உம், **கிழக்கில்** காணித்துண்டுகள் 1 மற்றும் 3-22உம் தெற்கில் பெருந்தெருவும்) **மேற்கில்** காணித்துண்டுகள் 168- 186 மற்றும் காணித்துண்டுகள் 223 - 228 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1367 இன் பிரகாரம் பதினாறு பேர்ச்சுகள் (ஏ.0,றூ.0,பே.16) விஸ்தீரணமுடைய காணி ஆகும். இக்காணி நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் C 859/274 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஆண்டிஅம்பலமவில் அமைந்த **"பீல்லவத்த எஸ்டேற்"** என அழைக்கும் காணி வரைபடம் இல. 1367 இல் காணித்துண்டு 217 என அடையாளமிட்டு பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, **வடக்கில்** காணித்துண்டுகள் 219 மற்றும் 52உம், **கிழக்கில்** காணித்துண்டுகள் 22 தொடக்கம் 47வரையும் **தெற்கில்** காணித்துண்டுகள் 216உம் **மேற்கில்** காணித்துண்டுகள் 218 மற்றும் 105 தொடக்கம் 129 வரையும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 1367 இன் பிரகாரம் ஒரு ஏக்கர் நான்கு தசம் நான்கு பேர்ச்சுகள் (ஏ.1,றூ.0,பே.4.4) விஸ்தீரணமுடைய காணி ஆகும். இக்காணி நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் C 980/286 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அத்துடன் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர்.எல். பெர்ணான்டோ தயாரித்த வரைபடம் இல. 1584 இல் எல்லை நிர்ணயித்த காணித்துண்டுகள் 2 மற்றும்3 மற்றும் வரைபடம் இல. 56/1984 இல் காணித்துண்டு 92 என அடையாளமிட்ட பாதை ஒதுக்கத்தையும் கொண்டதாகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திருமதி பீ.கே.எஸ்.ஈ. விமலசேன**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**சீதுவைக் கிளை**

1975 BOC www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

# பெறுகை அறிவித்தல்

## அநுராதபுரம் போதனா வைத்தியசாலை

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பொது உணவகம் மற்றும் மருத்துவ உணவகம், என்பவற்றை 2024 - 2025ம் ஆண்டிற்காக நடத்திச் செல்வதற்கு அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெறுகைக் குழுவின் தலைவரால் அது பற்றி ஆர்வம் காட்டுகின்ற தரப்பினரிடமிருந்து 2024.02.15 மு.ப. 10.00 வரை விலைமனுக்கள் கோரப்படும். கேள்விகள் திறத்தல் 2024.02.15 மு.ப. 10.00 இற்கு இடம் பெறும். சகல கேள்வி ஆவணங்களும் விநியோகித்தல் 2024.02.15 மு.ப. 10.00 இற்கு இடம்பெறும். சகல கேள்வி ஆவணங்களும் விநியோகித்தல் 2024.01.23 முதல் தினமும் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை தலைமையகத்தில் இடம்பெறும். கேள்வி ஆவணங்களை பரீட்சித்தல் மேற்படி நேரங்களில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் தலைமையகத்தில் இலவசமாக மேற்கொள்ள முடிவதுடன், கேள்விகள் திறக்கப்படுவதற்கு முன்பான கூட்டம் 2024.02.12 மு.ப. 10.00 இற்கு விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். கேள்வி ஆவணங்கள் விநியோகித்தல் 2024.02.14 பி.ப. 3.00 இற்கு முடிவடையும்.

கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கீழ்க்காணும் தகைமைகளை உறுதி செய்யக் கூடிய ஆவணங்களுடன், மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக பொது உணவகத்திற்கு ரூ. 5000.00 தொகையும், மருத்துவ உணவகத்திற்கு விண்ணப்பிப்பதாயின் அதற்காக ரூ. 3000.00 தொகையாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்குச் செலுத்திய பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு உணவகத்திற்கு மேல் விண்ணப்பிப்பதாயின் வேறுவேறாக கேள்வி விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும். தொலைபேசி: 0252222261. 2222262 ஐ அழைத்து 452,107 ஐ அழைத்து இது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

1) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பிரஜையாக உறுதி செய்வதற்காக தேசிய அடையாள அட்டையின் உறுதி செய்த பிரதியொன்று.
2) வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி.
3) கேள்வி ஆவணங்களைக் கோரும் கடிதம்.
4) வைத்தியசாலையில் இருந்து 10 கிலோமீற்றருக்குள் உணவு தயாரிக்கும் இடம் அமைந்திருப்பதுடன், அவ் இடத்தின் சுத்தத்தை உறுதி செய்வதற்காக அநுராதபுரம் மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் கீழ்க்காணுமாறு சொத்துச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
5) I. பிரதான உணவகம், ரூ. 2,000,000.00 (ரூபா இருபது இலட்சம்) பெறுமதியான பொது 170 மாதிரியின் மூலம் விநியோகிக்கப்பட்ட சொத்துச் சான்றிதழ்
6) II. மருத்துவ உணவகம் ரூ. 100,000.00 (ரூபா ஒரு இலட்சம்) பெறுமதியான பொது 170 மாதிரியின் மூலம் விநியோகிக்கப்பட்ட சொத்துச் சான்றிதழ்

தாமதமாக சமர்ப்பிக்கும் கேள்வி ஆவணங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறே இக்கேள்வி கோரல் பற்றிய அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**அநுராதபுரம்.**

---

## மக்கள் வங்கி

### புளத்கொஹுபிட்டிய கிளை

**1986 ம் ஆண்டு இல 32 எனும் சட்ட மூலத்தின் மூலம் திருத்திய 1961 ம் ஆண்டு இல 29 எனும் மக்கள் வங்கி சட்டமூலத்தின் 29 ட பிரிவின் கீழான தீர்மானம்**

1986 ம் ஆண்டு இல 32 எனும் சட்ட மூலத்தின் மூலம் திருத்திய 1961 ம் ஆண்டு இல 29 எனும் மக்கள் வங்கி சட்டமூலத்தின் 29 ட பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 31.10.2023 ம் திகதி கீழ்க்காணும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

பிரசித்த நொத்தாரிஸ் டப்ளியு.ஆர்.டீ.டீ. ரணதுங்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல 242 மற்றும் 2022.03.30ம் திகதிய ஈட்டுமுறியின் பிரகாரம் கொடுப்பனவு செய்தல். இல.22/9, சமன் மாவத்தை, கலவிலவத்தை, ஹோமாகம எனுமிடத்தில் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள 2007 இல 07 எனும் கம்பனிச் சட்டத்தின் பீ.வீ. 11445 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனியான தேதுகல ரீ பெக்டரி (தனி) கம்பனி பிணைப்புதாரராகவும் துலிக்கா ஷாமினி ஹேவகே ஈட்டாளராகவும் செலுத்த தவறியுள்ளதினால் இல 242 எனும் ஈட்டுமுறியின் கீழ் வழங்கப்பட்ட செலுத்தத் தவறிய ரூபா ஐம்பது இலட்சம் (5,000,000.00) மேலதிகப்பற்றினில் 2023.07.25 திகதிக்கு ரூபா ஐம்பத்தி ஐந்து இலட்சத்தி அறுபத்தி மூவாயிரத்தி நானூற்றி பத்தொன்பது ரூபாய் என்பத்தி மூன்று சதம் (5,563,419.83) மற்றும் 2023.07.01 ம் திகதியிலிருந்து அப்பணம் முழுதாக செலுத்தி முடிக்கும் வரை வருடத்திற்கு 16.5% வீதம் ஏலம் விடும் திகதி வரையிலான வட்டி மற்றும் பிரசித்த நொத்தாரிஸ் டப்ளியு.ஆர்.டீ.டீ ரணதுங்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 242 மற்றும் 2022.03.30 ம் திகதிய ஈட்டுமுறியின் பிரகாரம் வழங்கப்பட்ட தற்போது செலுத்தப்பட்டு வருகின்ற ரூபா ஐம்பது இலட்சம் (5,000,000.00) வியாபார மொத்தக்கடனுக்காக 2023.07.26 ம் திகதிக்கு செலுத்த வேண்டியுள்ள ரூபா முப்பத்தியேழு இலட்சத்தி ஐம்பதினாயிரத்தி ஐந்து சதம் (3,750,000.05) ஆரம்பத் தொகை மற்றும் அப்பணம் முழுதாக செலுத்தி முடிக்கும் வரை வருடத்திற்கு 18% வீதம் ஏலம் விடும் திகதி வரையிலான வட்டி மற்றும் அம் மக்கள் வங்கி சட்ட மூலத்தின் 29 எல் (29L) பிரிவின் கீழ் அறவிட வேண்டிய தொகை மற்றும் கட்டணங்களுடன் ஏதாவது கொடுப்பனவு கிடைக்கப் பெற்றிருந்தால் அதனைக் கழித்து அந் நிலையான மேலதிகப்பற்று மற்றும் கடன் தொகைக்காக ரூபா ஐம்பத்தி ஐந்து இலட்சத்தி அறுபத்தி மூவாயிரத்தி நானூற்றி பத்தொன்பது ரூபாய் என்பத்தி மூன்று சதம் (5,563,419.83) மற்றும் ரூபா முப்பத்தியேழு இலட்சத்தி ஐம்பதினாயிரத்தி ஐந்து சதம் (3,750,000.05) மற்றும் மேற்கூறப்பட்ட தொகை மற்றும் ஆரம்பத் தொகையின் கீழ் மேற்கூறப்பட்டவாறு அறவிடப்படவேண்டிய வட்டி உட்பட அறவிடப்பட வேண்டிய முழுத்தொகையையும் அறவிட்டுக்கொள்வதற்காக அதிகாரம் பெற்ற ஏல விற்பனைதாரர் கே.பீ.என். சில்வா என்பவரினால் அவ் இல. 242 மற்றும் 244 எனும் ஈட்டுமுறிகளின் கீழ் அவ் வங்கிக்கு அடகு வைத்துள்ள சொத்துக்கள் மற்றும் சுற்றுப்புறம் என்பன பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டுமென 1986ம் ஆண்டு இல. 32 எனும் சட்ட மூலத்தின் மூலம் திருத்திய 1961ம் ஆண்டு இல. 29 எனும் மக்கள் வங்கி சட்ட மூலத்தின் கீழ் தமக்கு கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் மக்கள் வங்கி பணிப்பாளர் சபை இத்தீர்மானத்தை மேற்கொள்கின்றது.

**அடகு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் விபரம்**

1. சப்ரகமுவ மாகாணம் கேகாலை மாவட்டம் பெலிகல் கோறளை கந்துபிட்டபத்து புளத்கொஹுபிட்டிய பிரதேச சபை எல்லைக்குள் புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் 61ஏ. அலவத்துர கிராம சேவகர் பிரிவில் கனேகொட கிராமத்தில் உள்ள கல்லிந்தேவத்த ஹனிலேண்ட் தோட்டம் (வரைபடத்தின் பிரகாரம் மீண்டும் அளக்கப்பட்டு கல்லிந்தவத்தை) எனும் காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் கே. கெமுனு குலசிறி அவர்களினால் 2020.04.29 ம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 1609 எனும் வரைபடத்தின் 01ம் இலக்கத் துண்டுக்காணி நாற்பத்தி ஒன்பது ஏக்கர் ஒரு றூட் முப்பத்தி மூன்று தசம் மூன்று (49 ஏக்கர் 01 றூட் 33.3 பர்ச்சஸ் ) விசாலமான காணிக்கு எல்லைகள்

**வடக்கு :** கலஉடஹேன TP 140414, TP 222397 வாய்க்கால் அலவத்துறையிலிருந்து றங்கல்லவுக்குச் செல்லும் வீதி மற்றும் துண்டு இல. 889 இன் பிரதான வரைபடத்தின் லொட் இல. 01 உம்

**கிழக்கு :** கலஉடஹேனவத்தை (ரீ.ஆர். பண்டா மற்றும் மேலும் சிலர் உரிமை கோரும் TP. 22972 மற்றும் TP 57/7) (மிகவும் தெளிவாகக் கலஉடஹேன TP 222397 மற்றும் 57 வது பிரதான வரைபடத்தின் 07 வது காணித் துண்டு அமுனெவலே வத்தை) யும்

**தெற்கு :** அமுனெவலே வத்தை யும்

**மேற்கு :** து.889 வது பிரதான வரைபடத்தின் 02 வது காணித்துண்டு பட்டேஹேன 4658 வது பிரதான வரைபடத்தின் Y 72வது காணித் துண்டு வாய்க்கால் து.889 வது பிரதான வரைபடத்தின் 01 வது காணித்துண்டு

எனும் இவ் எல்லைகளுக்குள் உள்ள காணி மற்றும் அதனுள் உள்ள கட்டிடங்கள் பயிர் பிரயோசனங்கள் பழவகை உட்பட சகலதும் வீதிக்கு குறுக்காக பாவிக்கும் உரிமையும் வீதிக்கு குறுக்காக நீர், மின்சாரம், தொலைபேசி வயர்கள் இழுக்கும் உரிமையும் உட்பட்டதாகும்.

இவ் ஆதனம் கேகாலை காணிப் பதிவகத்தில் U/68/128 எனும் வரலாற்றுப் பதிவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இயக்குநர் சபையின் கட்டளைப்படி,**
**பிராந்திய முகாமையாளர் கேகாலை**

**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக்காரியாலயம்**
**கேகாலை**

PEOPLE'S BANK
Pride of the Nation

Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

இளையோர் உலகக் கிண்ணம்

# இந்தியாவுக்கு எதிரான பயிற்சி போட்டியில் இலங்கை தோல்வி

இந்திய இளையோர் அணிக்கு எதிரான 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணத்தின் இரண்டாவது பயிற்சிப் போட்டியில் இலங்கை இளையோர் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணப் போட்டி தென்னாபிரிக்காவில் இன்று (18) ஆரம்பமாகிறது. இதனையொட்டி பிரடோரியாவில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற பயிற்சிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை இளையோர் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.




எனினும் 54 ஓட்டங்களை பெறுவதற்கு நான்கு விக்கெட்டுகளை பறிகொடுத்த இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணிக்கு மத்திய வரிசையில் தினுர களுபஹன 67 ஓட்டங்களை பெற்று கௌரவமான ஓட்டம் ஒன்றை பெற உதவினார்.

இதன்படி 50 ஓவர்கள் முடிவில் இலங்கை இளையோர் அணி 9 விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டங்களை பெற்றது.



இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த இந்திய இளையோர் அணியின் முதல் இரு விக்கெட்டுகளையும் 17 ஓட்டங்களுக்கு வீழ்த்த முடிந்தபோதும் 3ஆவது விக்கெட்டுக்கு மஹீஷ் கான் (51) மற்றும் அணித் தலைவர் உதாய் சஹரான் (50) 167 ஓட்டங்களை பகிர்ந்தனர்.

இதன்மூலம் இந்திய இளையோர்கள் 41.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கான 209 ஓட்டங்களை எட்டினர்.

இளையோர் உலகக் கிண்ண ஆரம்ப சுற்றில் சி குழுவில் ஆடும் இலங்கை அணி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (21) தனது முதல் போட்டியில் சிம்பாப்வே அணியை எதிர்கொள்ளவுள்ளது.

# மார்ச்சில் இலங்கையில் 4 அணிகள் கால்பந்து



உலகக் கிண்ண கால்பந்து தகுதிகாண் போட்டிகளில் தோல்வி அடைந்த அணிகளுக்காக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் நான்கு அணிகள் பங்கேற்கும் கால்பந்து தொடர் ஒன்று எதிர்வரும் மார்ச் 18 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ளது.

2026 உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் தோல்வியடைந்த அணிகளுக்கான சர்வதேச கால்பந்து சம்மேளனத்தினால் (பிஃபா) இந்த புதிய தொடர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இதில் போட்டியை நடத்தும் இலங்கையுடன் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் ஓசியானியா பிராந்தியங்களைச் சேர்ந்து மூன்று அணிகள் இடம்பெறவுள்ளன.

இந்த நாடுகளின் விபரம் எதிர்காலத்தில் உறுதி செய்யப்படவுள்ளன. உலகக் கிண்ண தகுதிகாண் சுற்றில் தோல்வி அடைந்த அணிகளுக்கு எதிர்காலத்தில் சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்கான வாய்ப்பு குறைந்துள்ள சூழலிலேயே அந்த அணிகளுக்கு இந்த உலக சம்பியன் சிப் தொடர் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# சம்பியனானது ஓரியன்ஸ்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

பண்டாரபொத்தான வளர்பிறை விளையாட்டுக்கழகம் நடாத்திய லீக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கெகிராவ ஓரியன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

பண்டாரபொத்தான பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்ற லீக் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கெகிராவ பிரதேசத்தைச் சேர்ந்த 18 கிரிக்கெட் அணிகள் கலந்து கொண்டன.



இறுதிப் போட்டியில் கலாவெவ டப்ளியூ.எஸ்.சீ. அணியை எதிர்கொண்ட ஓரியன்ஸ் அணி 04 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

தொடர் நாயகன் விருதை கெகிராவ ஒரியன்ஸ் அணியின் காவிந்த வென்றதோடு இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக கெகிராவ ஒரியன்ஸ் அணியின் சாகீர் தெரிவு செய்யப்பட்டார்.

# ஹூத்தி கிளர்ச்சியாளர் மீது அமெரிக்கா புதிய தாக்குதல்



யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்களை 'பயங்கரவாத' பட்டியலில் சேர்த்த அமெரிக்கா, அந்தக் கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து நான்காவது சுற்று தாக்குதலை நடத்தியுள்ளது.

செங்கடலில் உள்ள கப்பல்களை தாக்குவதற்கு தயாராக இருந்த சுமார் 14 ஹூத்தி ஏவுகணைகளை இலக்கு வைத்து இந்தத் தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கா கூறியது.

முன்னதாக ஹூத்தி கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து அமெரிக்காவுக்குச் சொந்தமான கப்பல் ஒன்றின் மீது கடந்த புதனன்று தாக்குதல் இடம்பெற்றுள்ளது. ஏடன் வளைகுடா பகுதியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதனால் கப்பலுக்கு சில சேதங்கள் ஏற்பட்டபோதும் எவருக்கு பாதிப்பு ஏற்படவில்லை என்று அமெரிக்க மத்திய கட்டளையகம் எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாரத்தில் அமெரிக்கா தொடர்பிலான கப்பல் தாக்கப்பட்டது இது இரண்டாவது முறையாகும். இதனை அமெரிக்க கப்பல் நிறுவனமான ஜென்கோவும் உறுதி செய்துள்ளது.

ஏடன் வளைகுடா வழியாகச் சென்றபோது தனது சரக்குக் கப்பல் தாக்கப்பட்டதாக அது கூறியது.

யெமனின் பெரும்பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஈரான் ஆதரவு ஹூத்திக்கள் காசாவில் உள்ள பலஸ்தீனர்களுக்கு ஆதரவாக செங்கடலில் செல்லும் இஸ்ரேலுடன் தொடர்புபட்ட கப்பல்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டு பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட ஹூத்திக்களை அமெரிக்க நிர்வாகம் மீண்டும் அந்தப் பட்டியலில் சேர்த்துள்ளது.

சர்வதேச செய்திகள்

# ஈரானில் பாகிஸ்தான் பதில் தாக்குதல்: பதற்றம் உச்சம்

அண்டை நாடான ஈரான் மீது பாகிஸ்தான் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது. ஈரானின் தாக்குதல் இடம்பெற்று இரு நாட்களின் பின்னர் பாகிஸ்தான் நேற்று (18) இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

எல்லையில் உள்ள சிஸ்தானோ பலுகிஸ்தானில் "பயங்கரவாத மறைவிடங்கள்" மீது தாக்குதல் நடத்தியதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

பாகிஸ்தான் எல்லையில் உள்ள சிஸ்தான் பலுகிஸ்தான் மாகாணத்தில் இருக்கும் கிராமம் ஒன்றில் பல ஏவுகணைகள் தாக்கியதாகவும் குறைத்தது ஒன்பது பேர் கொல்லப்பட்டதாகவும் ஈரான ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. முன்னதாக இந்தத் தாக்குதலில் மூன்று பெண்கள் மற்றும் நான்கு சிறுவர்கள் கொல்லப்பட்டதாக செய்தி வெளியாகி இருந்தது.



இந்தத் தாக்குதலை கடுமையாகக் கண்டித்திருக்கும் ஈரான், டெஹ்ரானில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்திற்கு இந்த தாக்குதல் தொடர்பில் விளக்கம் கேட்கப்பட்டிருப்பதாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சின் பேச்சர் நாசர் கானி தெரிவித்துள்ளார். இந்த இரு நாடுகளினதும் எல்லை பகுதியில் தாக்குதல்களை நடத்தும் ஆயுதக் குழுக்களுக்கு அடைக்கலம் அளிப்பதாக இரு நாடுகளும் பரஸ்பரம் குற்றம்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதலை உறுதி செய்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு, உளவுத் தகவல்கள் அடிப்படையிலான இந்த நடவடிக்கையில் பயங்கரவாதிகள் பலர் கொல்லப்பட்டதாக குறிப்பிட்டது.

இரு சிறுவர்கள் கொல்லப்பட்டதாக கூறிய பாகிஸ்தான் மீது கடந்த செவ்வாய்க்கிழமை ஈரான் நடத்திய தாக்குதலுக்கு கடும் கண்டனம் வெளியிடப்பட்ட நிலையிலேயே பாகிஸ்தான் இராணுவம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

முன்னதாக ஈரான் தாக்குதலை அடுத்து ஈரான் தூதுவர் பாகிஸ்தான் திரும்புவதை தடைசெய்த பாக். அரசு ஈரானுக்கான தூதுவரையும் திரும்பப் பெற்றது.

ஈரான் மற்றும் பாகிஸ்தான் 959 கிலோமீற்றர் தூரம் கொண்ட எல்லை பகிர்ந்து கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# காசா வான் தாக்குதல்களில் மேலும் பலர் பலி: மேற்குக் கரையிலும் நெருக்கடி சூழல்

## உணவுக்காக மக்கள் பாதி நாள் வரிசையில் காத்திருப்பு

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான புதிய உடன்படிக்கையின் கீழ் காசாவுக்கு உதவி வாகனங்கள் சென்றடைந்தபோதும் அங்கு அதிகரித்து வரும் தேவைகளுக்கு மத்தியில் இந்த உதவிகள் போதுமானதாக இல்லை என்று தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

கட்டாரின் மத்தியஸ்தத்துடன் இந்த உடன்படிக்கை எட்டப்பட்டது தொடக்கம் கடந்த இரு தினங்களில் குறைந்தது 10 டிரக் வண்டிகள் காசாவை சென்றடைந்துள்ளன. இதில் பலஸ்தீன போராளிகளின் பிடியில் உள்ள பணயக் கைதிகளுக்கான மருந்துகளுக்கு பகரமாக பொது மக்களுக்கான மருந்து மற்றும் ஏனைய உதவிகள் அனுப்பப்பட்டுள்ளன.

எனினும் உணவு மற்றும் உதவி பொருட்களை பெறுவதற்காக பாதி நாட்கள் பெரும் எண்ணிக்கையான பலஸ்தீனர்கள் வரிசையில் காத்துள்ளனர். மனிதாபிமான உதவிகள் மிகக் குறைவாக வரும் சூழலில் காசாவுக்குள் இடம்பெயர்ந்திருக்கும் 1.9 மில்லியன் மக்களுக்கான உதவிகளை விநியோகிப்பதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

வடக்கு காசாவில் நிலைமை மேலும் மோசமடைந்திருப்பதோடு அங்கு கடுமையான பஞ்சம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. போதுமான உணவு இல்லாததோடு தண்ணீரும் மாசுபட்டுள்ளது. வடக்கு மற்றும் தெற்கு காசாவில் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களுக்கு மத்தியில் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் தற்போது எகிப்துடனான எல்லையை ஒட்டிய ரபா பகுதியில் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

62 சதுர கிலோமீற்றர் பகுதியைக் கொண்ட ரபாவில் ஒரு சதுர கிலோமீற்றர் பகுதியில் 16,000க்கும் அதிகமானவர்கள் வசிக்கின்றனர். இது உலகின் மிகப்பெரிய நகரங்களை விடவும் சனநெரிசல் மிக்கதாக உள்ளது.

காசாவில் பஞ்சம் அதிகரித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது. அங்குள்ள 93 வீதமான மக்கள் பட்டினியை அனுபவிப்பதாக உலக உணவுத் திட்டம் கணித்துள்ளது. நோய்கள் வேகமான பரவி வருகின்றன. எதிர்வரும் மாதங்களில் நோய் மற்றும் பட்டினியால் உயிரிழப்போர் எண்ணிக்கை போரினால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை விஞ்சிவிடும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

மறுபுறம் காசாவில் இஸ்ரேல் வான், தரை மற்றும் கடல் மார்க்கமாக நடத்தும் உக்கிர தாக்குதல்கள் தொடர்ந்து நீடித்து வருகிறது. இஸ்ரேல் பாதுகாப்பு பகுதி என அடையாளப்படுத்திய ரபாவில் உள்ள வீடு ஒன்றின் மீது இஸ்ரேலிய போர் விமான கடந்த புதன்கிழமை இரவு நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் மற்றும் பெண்களை பெரும்பான்மையாகக் கொண்ட குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.



குடியிருப்பாளர்கள் வசித்து வந்த அல் சமிலி குடும்ப வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக உள்ளூர் தரப்புகளை மேற்கோள் காட்டி பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா கூறியுள்ளது.

தமது குடும்ப வீடு தாக்குதலுக்கு உள்ளாகும்போது தாம் பாடசாலை ஒன்றில் அடைக்கலம் பெற்றிருந்ததாக கதீர் அல் சமிலி என்ற பெண் தெரிவித்துள்ளார். "எனது சகோதரரியின் மனைவி, அவரது குழந்தைகள் மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரும் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். அவர்கள் எந்தத் தவறும் செய்யவில்லை" என்று அவர் அல் ஜசீனா தொலைக்காட்சிக்கு குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலில் இருந்து உயிர் தப்பிய வலீத் அல் சமிலி, உயிரிழந்தவர்களில் சிறுவர்கள் மற்றும் பெண்களும் இருப்பதாகக் கூறினார். "இதுவா இஸ்ரேலின் இலக்கு?" என்று கேள்வி எழுப்பினார்.

தெற்கு ரபா நகரின் ஸபுரா அகதி முகாமில் எல் ஹுத் குடும்ப வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து அங்கு இடிபாடுகளில் இருந்து மீட்புக் குழுக்கள் மற்றும் அம்பூலன்ஸ் பணியாளர்கள் பல சடலங்களை கண்டுபிடித்திருப்பதோடு காயமடைந்த பலரையும் மீட்டுள்ளனர்.

மத்திய காசாவின் அல் மகாசி மற்றும் புரைஜ் அகதி முகாம்கள் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் சரமாரி தாக்குதலை நடத்தியுள்ளன. புரைஜ் முகாமில் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருக்கும் வீடியோக்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி ஆரம்பமான காசா மீதான தாக்குதல்களில் இதுவரை 24,500க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் 70 வீதமானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

காசாவில் உள்ள பலஸ்தீன பல்கலைக்கழகத்தின் மீது இஸ்ரேலிய இராணுவம் 300க்கும் அதிகமான கண்ணி வெடிகளை வைத்து தகர்த்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இது காசாவில் இருந்த கடைசி பல்கலைக்கழகம் என்று யுரோ–மெட் மனித உரிமைகள் கணக்காணிப்புக் குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரமி அப்து தெரிவித்துள்ளார்.

"இஸ்ரேல் காசா பகுதியில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் 70 வீதமான பாடசாலைகளை அழித்துள்ளது" என்று அப்து எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார். "இது இனப்படுகொலை இல்லாவிட்டால் வேறு எதுதான் இனப்படுகொலை?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் நாளுக்கு நாள் பதற்றம் அதிகரித்து வருகிறது. துல்கர்மான் நகரில் இஸ்ரேலிய படைகளால் பலஸ்தீன ஆடவர் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

இதில் 28 வயதான முஹமது தவாஸ் என்பவர் இஸ்ரேலிய ஸ்னைப்பர் துப்பாக்கிதாரியால் சுடப்பட்டிருப்பதாக வபா செய்தி நிறுவனம் கூறியது.

இதன்படி கடந்த இரு நாட்களில் துல்கர்மான பகுதியில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது. இதில் நால்வர் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆளில்லா விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

வடக்கு மேற்குக் கரையில் உள்ள இரண்டு அகதிகள் முகாம்களான துல்கர்ம் மற்றும் நூர் ஷம்ஸ் முகாம்கள் கடந்த 24 மணி நேரத்திற்கும் மேலாக இஸ்ரேலிய தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. இந்த சுற்றிவளைப்புகளில் இஸ்ரேலிய இராணுவம் புல்டோசர்களை பயன்படுத்தி வீடுகள் மற்றும் உட்கட்டமைப்புகளை தகர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.